# புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம்
# (GSMB)

*“ இலங்கையில் கனிப்பொருள் வள கைத்தொழிற்துறையில் நாம் முன்னோடிகளாவோம் ”*

# வருடாந்த அறிக்கை
# 2011


**இல. 04, காலி வீதி, தெஹிவளை.**

**தொலை பேசி** : 011 2739307, 2739308

**தொலைநகல்** : 011 2735752

**மின்அஞ்சல்** : gsmb@slt.lk

**இணையம்** : www.gsmb.gov.lk



" இலங்கையில் கனிப்பொருள் வள கைத்தொழிற்துறையில் நாம் முன்னோடிகளாவோம் "

The beach sand deposits in Sri Lanka are located at Nayaru, Pulmoddai (Ilmanite, Rutile and Zircon), Thirukkovil (Ilmenite), Hambantota (Garnet), Devinuwara (Ilmenite and Garnet), Induruwa, Beruwala (Monazite, Zircon and Garnet), mouth of Kelani River (Ilmenite), North of Negombo (Ilmenite), Kudiramalai Point (Monazite) and South of Mannar (Ilmenite)

Photography : G.A.B.P Chandimal (G.S.M.B)

Designed by : Kaushalya Chathurani

## நோக்கும் பணியும்

### எமது நோக்கு

புவிச்சரிதவியல் சார்ந்த தகவல் ஆய்வு மற்றும் கருத்திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் மற்றும் மிகவும் மெதுவாக நீடி நிலைத்து நிற்கக்கூடியவாறு இலங்கையில் கனிப்பொருள்வள அகழ்வு செயற்பாட்டினை வழிநடாத்தும் பிரதான தேசிய புவிச்சரியதவியல் துறைக்கான முகவர் நிறுவனமாக செயற்படுதல்.

### எமது பணி

புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் கொள்கை திட்டமிடுபவர்களுக்கும் மற்றும் மக்களுக்கும் புவிச்சரிதவியல் தொடர்பான தகவல்களையும் ஆலோசனைகளையும் சேவைகளையும் வழங்குதல் மற்றும் சூழல் ரீதியில் நீடித்து நிலைத்திருக்கக் கூடியவாறு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக நாட்டின் கனிப்பொருட்களையும் வளங்களையும் முகாமைத்துவம் செய்தலும் மேம்படுத்தலும் மற்றும் கனிப்பொருட்கள் தொடர்பான ஆய்வுகள், பெறுமதி சேர்த்தல், போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை முறைப்படுத்தல் என்பவற்றை தமது பணிகளாக முன்னெடுக்கின்றது.

## புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்துக்குரிய பணிகள் பின்வருமாறு:

இலங்கையில் புவிச்சரிதவியல் வரைபடங்களை முறையாக தயாரித்தல் மற்றும் புவிச்சரிதவியல் வரைபடங்களை தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளல்.

இலங்கையில் கனிப்பொருட்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிடுதல்.

கனிப்பொருள் தயாரிப்பு மற்றும் அவற்றின் ஏற்றுமதி என்பவற்றுக்காக சுரங்க பணியகத்தின் வர்த்தக சாத்தியத்தை மதிப்பிடுதல்.

அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் கனிப்பொருட்களை தயாரித்தல், வர்த்தகம், ஏற்றுமதி, கனிப்பொருள் அகழ்வு மற்றும் ஆய்வுகளை வழிநடத்தல்.

புவிச்சரிதவியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல் நில அதிர்வு பணிகளை மீளாய்வு செய்தல் புவிச்சரிதவியல் பணிகளை மீளாய்வு செய்தல், புவிச்சரிதவியல் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

வர்த்தக அடிப்படையில் கனிப்பொருள் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

புவிச்சரிதவியல் பொறியியல் தொடர்பாக கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் புவிச்சரிதவியல்சார் தொல்லைகள் மற்றும் அழிவுகள் தொடர்பாக ஆலோசனைகளையும் தீர்வுகளையும் வழங்குதல்.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| தலைவரின் செய்தி | 1 |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 2 |
| முகாமைத்துவக் குழு | 4 |
| பதவியணி உறுப்பினர்கள் | 4 |
| பணியகம் தொடர்பாக | 6 |
| புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் பணிகள் தொடர்பாக விபரங்கள பெறக்கூடிய இடங்கள் | 7 |
| வரலாற்றுப் பின்னணி | 8 |
| ஒவ்வொரு பிரிவுகள் தொடர்பான செயலாற்றுகை | |
| பொதுவானவை | 9 |
| அகழ்வுப் பிரிவு | 17 |
| நிதி மீளாய்வு | 26 |
| நிர்வாக மீளாய்வு | 28 |
| சட்டப் பிரிவின் கடமைப்பொறுப்பு | 29 |
| நிதி அறிக்கை | 30 |
| வருமானக் கூற்றுக்கள் | 32 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 37 |
| கணக்காய்வு அறிக்கை - 2011 | 61 |
| கணக்காய்வுப் பதில்கள் - 2011 | 76 |
| புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் அகழ்வுப் பணியகத்தின் சமூகப் பொறுப்புக்கள் | 84 |

# தலைவரின் செய்தி



புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தவிசாளர் என்ற வகையில் 2008 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இப்பதவியைப் பொறுப்பேற்றேன். எமது அனைத்து பிரிவுகளிலும் பலமானதொரு வளர்ச்சியை வெளிப்படுத்தி மீளாய்வு ஆண்டில் புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் நல்லதொரு நிதிசார் பெறுபேறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டினுள் ரூ.மி. 618.5 ஆன மிகையை பணியகம் பதிவு செய்துள்ளது.

கனிணப் பிரிவு மற்றும் அகழ்வு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் 108 வருட சேவை பணியகத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. பணியகத்தின் வரலாற்றைக் கவனத்தில் கொள்ளும் போது இது 1903 ஆம் ஆண்டு ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் தலைமையில் இலங்கை கனிய ஆராய்ச்சி நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டதென்பதைக் குறிப்பிட முடியும். தமது நடவடிக்கைகளில் பாரியதொரு முன்னேற்றத்தை வெளிப்படுத்துவதற்கு நாம் இப்போது ஆயத்தமாக உள்ளோம். இந்த புதிய சவால்களை எதிர்கொள்வது சகல ஊழியர்களினதும் செயற்பணியாகுமென்பதுடன், தற்போது பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களின் மூலம் உச்ச பயனையும் நாம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2011 ஆம் ஆண்டுக்கான எமது பணியகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளின் கூற்றை உங்களிடம் சமர்ப்பிக்கும் கௌரவம் எனக்கு உரித்தாகியுள்ளதுடன், மேற்படி ஆண்டில் நாட்டுக்கு பரந்ததொரு அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்து எதிர்காலத்தை நோக்கி பாரியதொரு அடியை எடுத்து வைப்பதற்கு நாம் ஆயத்தமான ஆண்டாகும்.

இக்காலப்பகுதிக்குள் நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களில் எமது நடவடிக்கைகள் தொடர்பான பல்வேறு ஆற்றல்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களும் இனங்காணப்பட்டுள்ளன. அடுத்துவரும் ஆண்டுகளில் நல்லதொரு பெறுபேற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான முன்னோக்கிய பயணத்திற்கு நாம் நல்ல முறையில் ஆயத்தமாகி உள்ளோம்.

செயலாற்றுகை பற்றிய மீளாய்வு

புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகமானது, அரச நிறுவனமொன்றாக மக்களுக்குத் தரமான சேவையை ஆற்றுவதற்காக உச்சளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மனித வள அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றமானது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய துறைகளாக கருதப்பட்டு மேற்படி இலக்குகளை அடைந்து கொள்ள நாம் செயற்பட்டுள்ளோம். 2011 ஆம் ஆண்டில் நாம் பெற்றுக் கொண்ட வெற்றிகள் வருடாந்த அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்த உயர் மட்டத் தரத்தை அடைந்து கொண்டதன் மூலம் பெற்றுள்ள பெறுபேறுகளுக்கு முறையான வரவேற்பு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்குக் கிடைக்க வேண்டுமென்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதிசார் பெறுபேறுகள் சகல துறைகளிலும் நாம் பெற்றுள்ள பலமான வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

கடந்த ஆண்டு பெற்றுக் கொண்ட ரூ.மி. 667.7 உடன் ஒப்பிடும் போது ரூபா. மில் 861.8 ஆன புரள்வை இந்த ஆண்டில் பெற்றுக் கொள்ள பணியகம் செயற்பட்டுள்ளது. எமது ஊழியர்கள், சேவை பெறுனர்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களுடனும் இணைந்து தமது செயலாற்றுகையை பாரியளவில் உயர்த்தியமை இதற்கான காரணமாகும்.

மீளாய்வு ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு மேலதிக தொகையொன்றை வழங்குவதற்கு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் செயற்பட்டுள்ளதை குறிப்பிடக் கிடைத்தமை எனக்கு மகிழ்ச்சியளிப்பதுடன், பணியகத்திற்கு உரித்தான நிதிசார் பலத்தையும் இது வெளிப்படுத்துகின்றது என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

மதிப்பீடு

108 வருட காலமாக பணியகத்தின் முன்னேற்றத்திற்கு எமக்குத் தொடர்ச்சியாக உதவி வழங்கியுள்ள எமது பெறுமதிமிக்க சேவைபெறுனர்களுக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தமை எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

கடந்த காலங்களில் எமது பணியகத்தை மிகவும் வெற்றிகரமான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் முன்னோடியாகச் செயற்படுகின்ற நிறுவனமாக மாற்றியமைப்பதற்கு வழங்கிய பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பாக பணியகத்தின் சகல ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

கலாநிதி என்.பி. விஜயநந்த

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



2011ஆம் ஆண்டு பிரதானமான பல செயலாற்றுகை குறிகாட்டிகள் பலவற்றின் ஊடாக புவிச்சரிதவியல் சுரங்க ஆய்வு பணியகத்தினால் பல வெற்றிகளை ஈட்டிய வருடமாக இவ்வருடம் கருதப்படுகின்றது. மக்களை கேந்திரமாகக் கொண்ட அரச சேவையை பெற்றுக்கொடுத்தல் அரச திறைசேரிக்கு பெரும் வருமானத்தைப் பெற்றுக்கொடுத்தல், அகழ்வு பணிகளின் போது ஏற்படும் சூழல் மீதான தாக்கங்கள் தொடர்பாக நெருங்கிய வகையில் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றுக்காக அவற்றை பன்முகப்படுத்தல் குறிப்பிட்ட ஆய்வாளர்களுக்கு அறிவூட்டுதல், புதிதாக அனுமதிப் பத்திரங்ளை வழங்குதல், மண்சரிவு மற்றும் நாட்டின் புவிவரைபடங்களை பூர்த்தி செய்தல் (1:100,000) போன்ற பணிகளை மேற்கொள்கின்றது. மேற்கூறிய அனைத்து பணிகளும் மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்துக்கமைய இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமான நாடாக மாற்றுவதற்கான நோக்குடனேயே மேற்கொள்ளப்பட்டன.

யுத்தம் முடிவடைந்தவுடன் நாட்டின் வெற்றிகரமான பொருளாதார சூழலில் காணப்பட்ட நிலையான தன்மையை அடிப்படையாகக் கொண்டு 2011 இல் நாங்கள் பெற்ற செயலாற்றுத்திறன் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். யுத்தத்துக்குப் பின்னரான காலகட்டத்தில் நாட்டின் பொருளாதாரம் பயணித்த திசை மற்றும் பொருளாதார வேகம் ஊடாக 8.3 வீதத்தை பொருளாதார வளர்ச்சியை காணமுடிந்தது. நிர்மாணத்துறையில் நாம் எய்திய சுபீட்சம் மற்றும் பாரியளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களின் எண்ணிக்கை ஊடாக பெற்றுக்கொள்ளும் சேவைக்காக பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் அதனை பூர்த்தி செய்யும்போது எதிர்நோக்கிய உண்மையான சவால்களுக்கு சில சந்தர்ப்பங்களில் நிருவாக ரீதியாகக் காணப்படும் தேவையற்ற சட்டதிட்டங்ளை மாற்றுவதற்கான பாரிய நடவடிக்கைகள் கூட எடுக்கப்பட்டு அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான ஆற்றல் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்துக்கு கிடைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பொது திறைசேரிக்கு சம்பாதித்து கொடுக்கப்பட்ட வருமானங்களின் அடிப்படையில் 2011ஆம் ஆண்டில் எமது பணியகம் ‘ஏ’ தரத்தின் முன்னோடி நிறுவனம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது என்பதை நான் மிகவும் பெருமையுடன் கூறுகின்றேன். அவ்வாறு 2011இல் அரச துறையில் நடத்தப்பட்ட தேசிய வர்த்தக விசேட திறமைகளுக்கான விழாவில் திறமை விருதொன்றையும் எங்களால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

2011 இல் சம்பாதிக்கப்பட்ட மொத்த உழைப்பின் பெறுமதி 961.8 மில்லியன் ரூபாவாகும். இதில் செலவு மற்றும் வரிக்கு பின்னரான வருமானம் 618.4 மில்லியன் ரூபாவாகும். பொது திறைசேரிக்கு பணியகத்தினால் 1 பில்லியன் ரூபா வழங்க முடிந்தமை மாபெரும் வெற்றியாகும். எமது பணியகத்தில் பணிபுரியும் சகல பிரிவுகளினதும் ஊழியர்களின் மாபெரும் அர்ப்பணிப்பு இருக்காவிடின் இதனை சாதித்திருக்க முடியாது.

மக்களை இலக்காகக் கொண்ட மக்கள் சேவையொன்றை வழங்குவதற்காக எமது பதவியணியினரை மேலும் பலப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். அகழ்வு பிரிவு எமது நிறுவனத்துக்கு மிகவும் முக்கியமான பிரிவு என்பதுடன் தலைமை அலுவலகத்திலும் 13 பிராந்திய அலுவலகங்களிலும் 150க்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள். கூடிய கிராக்கி உள்ள பகுதிகளுக்கு மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கையாக கந்தளாய் மற்றும் ஹசலக பிரதேசத்தில் இரண்டு உப அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பலதரப்பட்ட பிரதேசங்களில் வாழும் வாடிக்கையாளர்களுக்கு வசதியான சேவைகளை வழங்குவதற்கான வாய்ப்பினை வழங்க பணியகத்துக்கு தேவைப்பட்டுள்ளது.

அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வூட்டுவதற்காக கட்டமைப்பு முறையிலான ஓர் அணுகுமுறையை நாம் கடைப்பிடித்துள்ளதுடன் 2011இல் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் எங்களால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் செயலமர்வுகள், விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை பணியகம் மேற்கொண்டது. மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படை நோக்கம் பிரதான பிரச்சினைகளை தீர்த்தல், அகழ்வுத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல், அரச நிறுவனங்களுக்கான விழிப்புணர்வூட்டல் மற்றும் 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பாக அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு அறிவூட்டல். பிரதானமாக நீர்ப்பாசனத் திணைக்களத்துக்காக உமா ஓயா கருத்திட்டம் தொடர்பாகவும் பொலிஸ் திணைக்களத்துக்கு அகழ்வு விடயங்கள் தொடர்பாக சட்ட ரீதியிலான தன்மைகள் தொடர்பாகவும் 11 செயலமர்வுகள் எங்களால் நடத்தப்பட்டுள்ளன.

போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக நடைமுறையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் இது தொடர்பான வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக பகிரங்கமாக இருதரப்பு கருத்து பறிமாற்றங்களுக்கு வழிவகுப்பதற்கும் நாங்கள் ஆயத்தங்களை செய்துள்ளோம். இந்த புரிந்துணர்வின் மூலம் காலத்துக்கு உகந்த தீர்மானங்களை எடுப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் மணல் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் குறிப்பிட்ட அரச மற்றும் தனிப்பட்ட நபர்கள் மற்றும் தாபனங்களை இலக்காகக் கொண்டு மகா ஓயா, களனி கங்கை, களுகங்கை போன்ற அரிப்புக்கு உள்ளான ஆற்றங்கரைகள் தொடர்பாக மற்றும் ஆற்றல்கரைகளை பலப்படுத்தல் தொடர்பாக மாறுபட்ட நோக்குகைகள் தொடர்பாக எங்களால் வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும் 2011 இல் கருங்கற் பாறைகளை வெடிக்க வைப்பது தொடர்பாக முதலாவது சான்றிதழ் பத்திர பாடநெறி வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் கற்பாறைகளை வெடிவைத்து தகர்த்தல் தொடர்பான பணிகளின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக நீண்ட காலமாக நிலவிய தேவைகள் இதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எங்களால் மிகவும் ஊக்கத்துடன் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக பேணுவதற்கு எதிர்பார்க்கும் பிரதான நிகழ்ச்சித் திட்டமாகும். 2011 இல் அகழ்வு அனுமதிப் பத்திரங்களுக்காக பணியகத்துக்கு கிடைத்த விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை தொடர்பாக கருத்தில் கொள்ளும்போது அந்த வருடத்தில் புதிதாக 8,722 விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்ததை குறிப்பிட வேண்டும் என்பதுடன் இது கடந்த ஆண்டையும் விட 19.2□ அதிகரிப்பாகும். அகழ்வுப் பிரிவினால் வெடிவைத்து தகர்த்தல் தொடர்பாக 130 ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் 7இ722 சோதித்துப் பார்த்தல்களும் இடம்பெற்றன.

புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம், நிலையான அபிவிருத்தி மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதுடன் அகழ்வுப் பணிகள் தொடர்பாக நிகழ்காலத்தில் எடுக்கப்படக்கூடிய சூழல் தாக்கங்கள் தொடர்பாக அடிக்கடி மேற்பார்வை செய்வதன் அவசியத்தை பூர்த்தி செய்யும் முகமாக பணியகத்தின் முகாமைத்துவத்தினால் 2011இல் வெளிக்கள உதவி உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2011இல் ஒட்டுமொத்தமான நாட்டையே உள்ளடக்கும் வகையில் புவிச்சரிதவியல் வரைபடங்களை உரியவாறு பூர்த்தி செய்வதற்காக பணியகத்தின் புவிச்சரிதவியல் பிரிவினால் முடிந்தது என்பதைகுறிப்பிட கிடைத்தமை தொடர்பாக மகிழ்ச்சியடைகின்றோம். புவிச்சரிதவியல் வரைபடங்களை தயாரித்தல் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் பிரதான பணியாகும். 1:100,000 அளவிலான அடிப்படை தள வரைபடங்கள் பெரும்பாலும் பணியகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 1:100,000 அளவிலான அடிப்படைத் தள வரைபடங்களில் பூரணப்படுத்துவதற்கு மீதியாக இருந்த ஒரேயொரு புவிச்சரிதவியல் வரைபடம் இல. 12 (அரலகங்வில - பத்திருப்பு) வரைபடமாகும். 2011 ஆண்டுக்குள் 12ஆம் இலக்க வரைபடத்தின் அடையாளங்களை அச்சிடும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு நெறிப்படுத்தும் குழுவின் ஆலோசனைக்கமைய நெறிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1:100,000 அளவுடைய புவிச்சரிதவியல் வரைபட அடிப்படையில் ஒட்டுமொத்தமான நாட்டில் (1500,000) புவிச்சரிதவியல் வரைபடமொன்று தயாரிக்கப்பட்டு எண்கள் இடப்பட்டு நெறிப்படுத்தப்பட்டது. இந்த இரண்டு வரைபடங்களும் தற்போது அச்சிடுவதற்கான மட்டத்தில் உள்ளது.

களுத்துறை (வரைபட இல. 73) மற்றும் பலபிடிய - அம்பலாங்கொடை (வரைபட இல. 85/86) 1:50,000 அளவுள்ள நான்கு சமபங்கைக் கொண்ட வரைபடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சிலாபம் (வரைபட இல. 46) வரைபடமிடும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. மண் சார்ந்த அரசாயன வரைபடங்களை தயாரிக்கும் திட்டத்தின் கீழ் திம்பொல்கெட்டிய (82) மற்றும் பதவிய (17) மற்றும் 1:50,000 அளவிலான வரைபட பிரதேசத்தை உள்ளடக்கி 1500 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. பகுப்பாய்வு பணிகளை வேகமாக்குதல், மேம்படுத்தல் என்பவற்றுக்காக சேர்ப்பதன் மூலம் பிரசோதனைக்கூடம் நவீனமயப்படுத்தப்பட்டது. வருடத்தின் இறுதியில் புதிதாக பொருத்தப்பட்ட இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி மாதிரிகளை பகுப்பாய்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கைக்குள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நில அதிர்வு நிலைமைகளை மேற்பார்வை செய்வதன் மூலம் விசேட முன்னேற்றம் காணப்படுகின்றது. (பல்லேகலை, ஹக்மன, மஹாகந்தராவ) ஆகிய நில அதிர்வு அவதானிப்பு நிலையங்களிலிருந்து புவிச்சரிதவியல் தரவுகள் மற்றும் நில அதிர்வு மென்பாகங்களைப் பயன்படுத்தி அர்த்தம் புகட்டுவதற்காக அதிகாரிகள் பயிற்றுவிக்கப்பட்டனர். இதனால் நாட்டில் ஆரம்பமான சில நில அதிர்வுகள் தொடர்பாக அவை இடம்பெற்ற இடங்கள் மற்றும் அவற்றின் அளவினை தீர்மானிப்பதற்காக பணியகத்துக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தனியார் மற்றும் அரச துறையினரின் வேண்டுகோளுக்கு அமைய கனிப்பொருள் ஆய்வு மற்றும் துளையிடும் கருத்திட்டங்கள் சிலவற்றை மேற்கொள்வதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்தவுடன் இதன் மூலம் சம்பாதிக்கப்பட்ட வருமானம் 41 மில்லியன் ரூபாவாகும்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தொலைநோக்கு காரணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட துரித பொருளாதார அபிவிருத்தி காரணமாக நாட்டின் பொருளாதார சூழல் வேகமாக மாறிவருவதைக் காரணமாகக் கொண்டு எங்களுக்கும் எதிர்காலத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் புதிய சவால்களில் வெற்றி பெறுவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். 2011 மறக்க முடியாத வெற்றிகரமான வருடமாக இருந்ததுடன் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் கனவை நனவாக்கும் வகையில் எதிர்காலத்தில் நாட்டின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்க தயாராக இருக்கின்றோம்.

பீ.எ. பீரிஸ்

## முகாமைத்துவக் குழு

தலைவர் : கலாநிதி. என்.பி. விஜயாநந்த

உறுப்பினர்கள் : திரு. பி.ஏ. பீரிஸ்

: திருமதி. ரி.டி.எஸ்.ஏ. விஜேநாயக்க

: திரு. ஆர்.எஸ்.என். அதிகாரி

: திரு. எம்.ஏ. தாஜுதீன்

: திரு. கே.எச்.டப்ளியூ.கே. நாரத சுமனரத்ன

: திரு. என்.பி.கே. நெம்மாவத்த

முகாமைத்துவ சபையின் செயலாளர் / சட்ட உத்தியோகத்தர்

: திருமதி. எம்.எஸ்.கே. பர்னாந்து

## சிரேஷ்ட முகாமைத்துவம்




## பதவியணி உறுப்பினர்கள் - புவிச்சரிதவியல் பிரிவு



கலாநிதி. டப்ளியூ.கே.பி.என். பிரேம்
பிரதிப் பணிப்பாளர் (புவிச்சரிதவியல்)

### உதவிப் பணிப்பாளர் (புவிச்சரிதவியல்)
திரு. கே.ரி.யு.எஸ். டி சில்வா

### புவிச்சரிதவியலாளர்கள்
திரு சிஎச்ஈஆர் சிறிவர்தன
திரு கேரியுஎஸ் த சில்வா
திருமதி டிபிஆர் வீரகோன்
திரு எம்எம்ஜேபி அஜித் பெரேரா
திரு ஏஎஸ் ஜயகொடி
திரு ஏஎம்எம் ரத்நாயக்க
திரு பிஎன் ரணசிங்ஹ
கலாநிதி டப்ளியுஜஎஸ் பெர்னான்டோ
திரு டிஎம்எஸ் திசாநாயக்க
திரு எஸ்ரி களுபண்டார
செல்வி டிரினஎஸ் விஜேசுந்தர
செல்வி சிஎன்பி விஜேரத்ன
திரு ஏஎம்டியு அபேசிங்ஹ
திரு ஏஏசி பிரியந்த
திரு எச்ஏடிஎன் சஞ்ஜீவ
திரு எம்எம்ரிஎன்பி முனசிங்ஹ
செல்வி. டி.எஸ்.எம்.சி. பர்னாந்து
செல்வி. என். இலங்ககோன்

### புவிபௌதீகவியலாளர்கள்
திரு. எஸ்.என். டி சில்வா
செல்வி. எஸ்.என்.பி. தல்தென
திரு. எஸ்.டப்ளியூ.எம். செனவிரத்ன

### சிரேஷ்ட இரசாயனவியலாளர்
திருமதி வைபிஎஸ் சிறிவர்தன

### இரசாயனவியலாளர்
திருமதி. வி.ஆர். வனசிங்ஹ
திருமதி எச்ஏபி ஜயலத்
திருமதி ஆர்கேஎம் சுரஞ்சனி

### நூலகர்
செல்வி பிஎன் அமரசூரிய

### சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு கேஎஸ்ஜே பெர்னான்டோ

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
திரு பிடி சிறிசேன
திரு எம்ஏஆர் மஞ்சநாயக்க
திரு எம்டி பத்மசிறி
திரு எம்பிஎம் சில்வா

திரு சிடி குனாமுனி
திரு ஏஜேஎம்டி குமார
திரு து'ர தேசபிரிய
திரு எம்என் பிரியசாந்த
திரு பிபிசிஎல்பி பலியதெனிய
திரு ரிஎம்ஏ கிறிஸ்டி

## தகவல் தொழில்நுட்ப பணியாளர்கள்

திரு டிஎம்கே திசாநாயக்க
திரு கேஏஆர்பி விக்கிரமசிங்ஹ
திரு பிஜிபிபி திலகரத்ன

## ஆய்வு உதவியாளர்கள்

திரு எம்பியுஎச் த சில்வா
திரு டப்ளியுஎச்டிசி ருக்மால்

## படவரைஞர்

திருமதி என்எஸ்கே. கருனாதிபதி
திரு. பி. பிரியங்க

## வரைபடக்கலைஞர்

திருமதி ஜிடிரிடி நந்ததாச

## பதவியணி உறுப்பினர்கள் - அகழ்வுப் பிரிவு



பொறியியலாளர். டி. சாஜ்ஜன டி சில்வா
பிரதிப் பணிப்பாளர் (அகழ்வு)

## சிரேஷ்ட அகழ்வு பொறியியலாளர்கள்

பொறியியலாளர். எல்ஏ. பெர்னான்டோ

## அகழ்வு பொறியியலாளர்கள்

பொறியியலாளர். தம்மிக பிரசாத்
பொறியியலாளர். டப்ளியு.ஜி.எஸ். கோகிலா
பொறியியலாளர் டப்ளியுஏகேஎஸ். ரூபவன்ச
பொறியியலாளர் ஜஎம்ரிஎன் இலங்கோன்
பொறியியலாளர் யு.எச்.ரி. பிரியந்த
பொறியியலாளர். கேவி. ஜகத்
பொறியியலாளர். என்டப்ளியுசிபி. லங்கா
பொறியியலாளர். ரிஎம்டப்ளியு. பண்டார
பொறியியலாளர். கே.ஏஎஸ். தர்மசிறி
பொறியியலாளர் ஏ.பி. விமலசேன
பொறியியலாளர். டி. மயூரன்
பொறியியலாளர். எச்கேஎம்.குணசேகர
பொறியியலாளர். சி.கே. கருனாநந்த
பொறியியலாளர். தனுஜா தயரத்ன
பொறியியலாளர். ரிஎஸ். குமார
பொறியியலாளர் எச்ஏசிகேடப்ளியு பண்டார
பொறியியலாளர் எம்ஆர்எம் பாரிஸ்
பொறியியலாளர். கே. லோககௌரி
பொறியியலாளர். டப்ளியு. விமலரத்ன
பொறியியலாளர். எச்பி சிறிவர்தன
பொறியியலாளர். எஸ்ஏஜஜெ. ருத்ரிகோ

பொறியியலாளர் (செல்வி) யுஎன் டிலந்தி
பொறியாயலாளர் டப்ளியுஏஜசி வன்னியாரச்சி
பொறியியலாளர். ஜி. ஜயரூபன்
பொறியியலாளர். ஹசித அதிகாரி

## நூலகப'பொறுப்பாளர்

திருமதி பி.என். அமரசூரிய

## உதவி பதிவாளர்கள்

திருரி தஹநாயக்க
திருமதி டிடிஆர்எஸ் மதுவந்த
திரு ஏஎம் சமரசேகர
திருமதி டப்ளியுடிடிஆர் கனேகம
திரு பிஆர்டி த சில்வா
திருமதி டப்ளியுஎம்பிஎஸ் வீரசுந்தர
திருமதிஈஎம்ஜிஎன்எஸ் ஏக்கநாயக்க
திருமதி எம்ரிடி வனிகசிங்ஹ
திருமதி எச்எம்ஏஜி கருணாரத்ன
திரு நீல் விதானகே
செல்வி எஸ் தர்சினி
செல்வி காயத்திரி பெரேரா
செல்வி டப்ளியுடப்ளியு.எம்ஏபி விஜேரத்ன

## பதவியணியினர் - நிதி முகாமைத்துவம



திரு. எம்டப்ளியு ஜயமான்ன
பொது முகாமையாளர்

## நிதி முகாமையாளர்

திருமதி ஆர்பிடி பத்தம்பெரும

## நிர்வாக உத்தியோகத்தர்

திரு. ஜிஎம்டப்ளியு பெரேரா

## பதவியணி உறுப்பினர்கள் - உள்ளக கணக்காய்வு

## உள்ளக கணக்காய்வாளர்

திரு. ரி.எல். சந்திரசேன

## பணியகம் தொடர்பாக

### இலங்கையில் கனிப்பொருள்வள கைத்தொழில் துறையில் முன்னோடிகள் நாம் ஆவோம்.

பாறையியல் விசேடமாக புவிச்சரிதவியல் மற்றும் கனிப்பொருள் வளங்கள் தொடர்பாக பணியாற்றும் நிறுவனமாக இது நாட்டுக்க மிகவும் தேவையான மற்றும் மிகவும் முக்கியமான நிறுவனமாகும். நாட்டின் புவிச்சரிதவியல் கட்டமைப்பு, மற்றும் மிக முக்கியமாக நாட்டின் கனிப்பொருள் வளங்கள் தொடர்பாக பாரிய அறிவுள்ள நிறுவனமாக விளங்குகின்றது. கனிப்பொருள் வளங்களை உரியவாறு அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்துவது நாட்டின் பொருளாதர அபிவிருத்தி நலன்புரி, தொடர்பாக நேரடியாக தொடர்புபடும் விடயமாகும். அத்தகைய நிறுவனம் தேசிய புவிச்சரிதவியல் ஆய்வு நிறுவனமாக கருதப்படுவதுடன் தேசிய தேவைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட மற்றும் அடிப்படையான ஏனைய கொள்கைத் திட்டங்களை தயாரிக்கும் பொறுப்பு அவற்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் இந்தக் கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இலங்கையில் கனிப்பொருள்வள அபிவிருத்தி தொடர்பாக அதிகாரம்பெற்ற நிறுவனமான புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் இதுவரை புவிச்சரிதவியல் ஆய்வுகளைக் மேற்கொண்டு நாட்டுக்கு பல நன்மைகளைப் பெற்றுக்கொடுத்த நிறுவனமாகும்.

இன்று இருக்கும் சகல கனிப்பொருள் வளங்கள் சார்ந்த கைத்தொழில் துறைகள் அதாவது சீமெந்து, பீங்கான், படிகமணல், பசளை, செங்கல், ஓடுகள், வடிவமைப்புக் கற்கள் போன்ற கைத்தொழில் துறைகள் இந்த தாபனத்தினால் அதன் வரலாற்றுக் காலம் தொடக்கம் மேற்கொண்ட ஆய்வுகளின் காரணமாகவே நிலைத்திருக்கின்றன.

இலங்கை ஓர் சிறிய நாடு என்பதனால் அதன் மேற்பரப்பும், கனிப்பொருள் வளமும் அதனுடன் ஒப்பீட்டளவில் சிறிய அளவிலேயே உள்ளன. இதனால் இந்த நிறுவனத்தினால் கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில்களை ஆரம்பிப்பதை ஊக்குவிக்கும் அதேவேளை கனிப்பொருள் என்பது மீண்டும் உருவாகாத ஓர் வணிகப் பொருள் என்பதனால் அவற்றை வீண் விரயமாக்காமல் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

நாட்டுக்கு புவிச்சரிதவியல் சாத்தியங்கள் தொடர்பான பிரதான வழங்குனரான புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் எமது பூமியில் உள்ள வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பாக இருக்கும் புரிந்துணர்வை மேம்படுத்துகின்றது. விஞ்ஞான தேர்ச்சியின் பல்லினத்தன்மை காரணமாக பல்வேறுபட்ட விடயங்களில் ஆய்வுகளை நடத்த எமக்கு வாய்ப்பு வழங்குவதுடன் வள முகாமையாளர்கள், புவிச்சரிதவியல் வரைபடங்கள் உட்பட சகல விதமான விஞ்ஞானத் தகவல்களும் வழங்கப்படுகின்றன.

எமது பூமியை விபரிப்பதற்கு மற்றும் விளங்கிக் கொள்வதற்கு இயற்கை அனர்த்தங்களினால் உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு புவிச்சரிதவியல் ஆற்றலையும், கனிப்பொருள் வளங்களையும் முகாமைத்துவம் செய்தல் அவற்றின் தர ஆயுட்காலத்தை பாதுகாத்தல், மேம்படுத்தல் என்பவற்றுக்கான சேவைகளை புவிச்சரிதவியல் திணைக்களம் நாட்டுக்கு வழங்குகின்றது.

பணியகமானது அடிப்படையாக நான்கு பணிகளை மேற்கொள்கின்றது. புவிச்சரிதவியல் வரைபடங்களை தயாரித்தல், கனிப்பொருள் வள ஆய்வு, அகழ்வு உரிமைகள் மற்றும் அகழ்வுகள் தொடர்பான சட்ட பிரமாணங்கள் (அடிப்படை பணிகள்) சேவை பெறுபவர்களை இலக்காகக் கொண்ட பணிகள் (கனிப்பொருள் வளம், ஆய்வு, விஞ்ஞானகூட சேவைகள், புவி பௌதீக துளையிடும் ஒப்பந்தங்கள்) மற்றும் புவிச்சரிதவியல் தகவல்கள் (நூலகத்தில் உள்ள பகிரங்கப்படுத்தப்பட்ட மற்றும் பகிரங்கப்படுத்தப்படாத அறிக்கைகள் வரைபடங்கள் மற்றும் வேறு பாதுகாக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்தல்) பெற்றுக்கொடுத்தல் என்பன அந்த பணிகளாகும்.

இன்று புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகமானது 14 பிரதேச காரியாலயங்களைக் கொண்டுள்ளதுடன் அவற்றுடன் இணைந்து கனிப்பொருள் தொழில்துறையில் ஈடுபட்டுள்ளது. சேவை பெறுபவர்களுக்கு மிகவும் உயர்மட்டத்திலான சேவைகளையும் வழங்குகின்றது.




புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் தனது சேவைகளை நாடு முழுவதிலும் விஸ்தரித்துள்ளது.

## புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் பணிகள் தொடர்பாக விபரங்கள பெறக்கூடிய இடங்கள்

| எமது அலுவலகம் | முகவரி | அலுவலகத் தலைவர் | தொலைபேசி பெக்ஸ் |
|---|---|---|---|
| தலைமை அலு-வலகம் | இல. 04, காலி வீதி, தெஹிவளை | பணிப்பாளர் நாயகம் | +94-11-2739307-8 |
| அம்பாறை | இல. 734, ஜயவர்தனபுர, அம்பாறை | பொறியியலாளர் எச்ஏசிகேடப்ளியு பண்டார | +94-11-2735752 |
| அநுராதபுரம் | இல. 596/69, பண்டாரநாயக்கமாவத்தை, அநுராதபுரம் | பொறியியலாளர் கேஏஎஸ் தர்மசிறி | +94-63-2223385 |
| பதுளை | இல. 6/3, பண்டாரநாயக்கமாவத்தை, பதுளை | பொறியியலாளர் ரிஎம்டப்ளியு பண்டார | +94-25-2223535 |
| மட்டக்களப்பு | மாவட்ட செயலக அலுவலகம், மட்டக்களப்பு | பொறியியலாளர் எம்ஆர்எம் பாரீஸ் | +94-55-2222787 |
| ஹம்பாந்தோட்டை | மாவட்ட செயலக கட்டிடத்தொகுதி, ஹம்பாந்தோட்டை | பொறியியலாளர் எல் அசே பெர்னான்டோ | +94-55-2225210 |
| யாழ்ப்பாணம் | விடுதிக் கட்டிடம் தேசிய வீடமைப்பு அதிகாரசபை சுண்டிக்குழி யாழ்ப்பாணம் | பொறியியலாளர் டி. மயூரன் | +94-65-3064576 |
| களுத்துறை | இல. 9A, பள்ளிவாசல் வீதி, வெத்துமகட, களுத்துறை தெற்கு | பொறியியலாளர் கேவி ஜகத் | +94-47-2222477 |
| கண்டி | ஜனசவியகம, பல்லேகல, கண்டி | பொறியியலாளர் தம்மிக பிரசாத் | +94-21-2224595 |
| குருநாகல் | இல. 11, மொன்னக்குளம் வீதி, குருநாகல் | பொறியியலாளர் எஸ்ஏஜஜெ ரொட்ரிகோ | +94-34-2223743 |
| மாத்தறை | இல. 8, புளவர் ஹவுஸ், எல்லாவல மாவத்தை, மாத்தறை | பொறியியலாளர் யுஎச்ரி பிரியந்த | +94-81-2421294 |
| மொனராகல | இல. 196/6, வெல்லவாய வீதி, மொனராகல | பொறியியலாளர் டப்ளியுஜிஎஸ் கோகிலா | +94-37-2232542 |
| இரத்தினபுரி | இல. 168/9, புதிய நகரம், இரத்தினபுரி | பொறியியலாளர் ரிஎஸ் குமார | +94-41-2220593 |
| திருகோணமலை | பிரதேச செயலாளர் அலுவலகம், திருகோணமலை | பொறியியலாளர் டப்ளியு விமலரத்ன | +94-55-2277392 |
| கந்தளாய் | 85வது சந்தி, அக்போபுர, கந்தளாய் | பொறியியலாளர் டப்ளியு விமலரத்ன | +94-45-2224371<br>+94-26-3202411 |

## வரலாற்றுப் பின்னணி

1903ஆம் ஆண்டு கலாந்தி ஆனந்த குமாரசுவாமி அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கனிம ஆய்வு நிறுவனமானது (எம்எஸ்சி) ஆரம்பிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் நிலவிவந்த புவிச்சரிதவியல் திணைக்களங்கள் பலவற்றுக்கு பதிலீட்டாளராக புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தை அறிமுகப்படுத்தலாம். நாட்டில் உள்ள கனிப்பொருள் வளங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல், அவற்றை இனங்காணுதல் மற்றும் மேம்படுத்தல் போன்ற விடயங்களில் இந்த திணைக்களத்தினால் வரலாற்றுக் காலமாக மிகவும் விசேடமான சாதனை படைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது நடைமுறையிலிருக்கும் கனிப்பொருள் தொடர்பான வர்த்தகங்கள் அனைத்தும் இதற்காக கடமைப்பட்டுள்ளது.

1939ஆம் ஆண்டாகும்போது கனிப்பொருள் ஆய்வு நிறுவனம், கனிப்பொருளியல் திணைக்களமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் 1969இல் இது புவிச்சரிதவியல் ஆய்வு திணைக்களமாக மீண்டும் பெயரிடப்பட்டது. புதிய அகழ்வு திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட புதிய பொறுப்புக்களுடன் புவிச்சரிதவியல் ஆய்வு நடவடிக்கைகளை தொடர்புபடுத்தி 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்க கனிப்பொருள் வள சட்டத்தின் மூலம் 1993 மார்ச் மாதம் 18ஆந் திகதி இந்த பணியகம் நிறுவப்பட்டது.

கனிப்பொருள் வள அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற நிறுவனமான இந்த பணியகம் நிறுவப்பட்டதன் மூலம் கனிப்பொருட்கள் தொடர்பான தொழிற்துறையை மேம்படுத்துவதற்காக அரசுக்கான அப்பணிப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. விலை அதிகமான தாபன பொருட்கள், கட்டிடங்கள் மற்றும் நிர்மானத் துறைக்காக தேவையான பதிலீடுகளை வழங்குவதன் மூலம் கனிப்பொருட்கள் மூலம் தொழில்களை ஏற்படுத்தல் மற்றும் நாட்டுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தல் இடம்பெறுகின்றது. தேசிய புவிச்சரிதவியல் தரவுகளை பேணுதல் மற்றும் அந்த தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்காக அதற்கான பொறுப்பினை இந்த நிறுவனம் ஏற்கின்றது.

கலாநிதி ஆனந்த குமாரசுவாமியின் புகைப்படம்



## ஒவ்வொரு பிரிவுகள் தொடர்பான செயலாற்றுகை

### பொதுவானவை

புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் பிரதான பணிகள் தொழில்நுட்ப மற்றும் வழிநடத்தலுக்கான தன்மையைக் கொண்டுள்ளன. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் இந்த பணிகள் புவிச்சரிதவியல் ஆய்வுப் பிரிவு, சுரங்கப் பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுவதுடன் இந்த ஒவ்வொரு பிரிவும் பிரதி பணிப்பாளர் ஒருவரின் கீழ் இயங்குகின்றது. புவிச்சரிதவியல் வரைபடங்களை தயாரித்தல், கனிப்பொருள் ஆய்வு மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வுப் பணிகள் என்பன புவிச்சரிதவியல் ஆய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க கனிப்பொருள் வள சுரங்க சட்டத்துக்கமைய வழிநடத்தல் தொடர்பான கடமைகளை சுரங்கப் பிரிவே பொறுப்பேற்று மேற்கொள்கின்றது.

நாட்டின் பலதரப்பட்ட பிரதேசங்களில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்துக்குரிய கடமைகளை முன்னெடுப்பதற்காக 14 பிரதேச அலுவலகங்கள் உள்ளதுடன் விசேடமாக தமக்குரிய பிரதேசங்களில் சுரங்க அகழ்வுப் பணிகளை வழிநடாத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. சில பிரிவுகளில் போதுமான பதவியணியினர் இல்லாதவிடத்து தற்போதுள்ள பதவியணியினர் மேற்கொள்ள வெண்டிய கடமைகளின் முன்னுரிமைக்கேற்ப சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

### புவிச்சரிதவியல் ஆய்வுப் பிரிவு

உற்பத்தித் திறன் நாளாந்தம் நிறைவேற்ற வேண்டிய பணிகளை மற்றும் நிதி வருமானம் ஆகிய விடயங்கள் தொடர்பாக கருத்தில் கொண்டு பார்க்கும்போது 2011அம் ஆண்டு புவிச்சரிதவியல் பிரிவுக்கு வெற்றிகரமான ஆண்டாக விளங்கியது. சேவை பெறுநர்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பலதரப்பட்ட கருத்திட்டங்கள் ஊடாக சம்பாதிக்கப்பட்ட தொகை 41,000,000/= ரூபாவுக்கும் அதிகமாகும். தேசிய ரீதியிலாக முக்கியத்துவம் வாய்ந்த அல்லது கூடிய வருமானம் பெறக்கூடிய வேறு கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க நேர்ந்தமையால் சில பணிகளை தாமதிக்க அல்லது பிற்போட பணியகத்துக்கு நேர்ந்தது.

திட்டமிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்ய முடியாமல் போனமைக்கான மற்றுமோர் காரணம் (உதா. புவி பௌதீக வரைபடங்களை தயாரித்தல்) தற்போது இருக்கும் விசேட உபகரணங்களின் மந்தகரமான செயற்பாடாகும். உதாரணமாக அணு உறிஞல் வெளிப்பாட்டு நிறமாயையை பயன்படுத்தி மண் மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட காலத்தையும் விட கூடிய காலம் எடுத்தது. இந்த பிரச்சினைக்கு தீர்வாக மற்றும் உயர் மட்டத்திலான பகுப்பாய்வுப் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் அணு உறிஞல் நிறமாலை உபகரணமொன்று 16,500,000/= ரூபா செலவுடன் பொருத்தப்பட்டது.

## புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் தனது நிதியைப் பயன்படுத்தி ஆரம்பித்த கருத்திட்டங்கள்

### கேம்பிரியன் வரைபடங்களை தயாரித்தல்

### 1:100 000 அளவுள்ள புவிச்சரிதவியல் வரைபடங்கள் தயாரித்தல்

1:100,000 அளவினையுடைய புவிச்சரிதவியல் நில அளவைப்படங்களை தயாரித்தல் பணியகத்தின் முக்கிய பணியாக இருந்தது. வருடம் முழுவதும் இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றின் நிலச்சரிதவியல் விபரங்களை அடங்கிய நில அளவைப்படங்கள் மற்றும் கனிப்பொருட்கள் உட்பட நிலத்துக்குள் இருக்கும் நீரினை ஆய்வு செய்தல், பாரிய நிர்மாணப் பணிகள் மற்றும் சிவில் பொறியியலாளர் பணிகள் மற்றும் மண்சரிவு அபாயங்கள் தொடர்பான வரைபடங்களை தயாரித்தல் போன்ற பலதரப்பட்ட கடமைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

புவிச்சரிதவியல் வேலைத்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்ய மீதியாக உள்ள ஒரேயொரு நில அளவைப்படம் வரைபட இல. 12 (அரலகண்வில - பட்டிருப்பு) ஆகும். வெளிக்களப் பணிகள், மற்றும் புவிரேகை பணிகளை பூர்த்தி செய்தல் அடிப்படை வரைபட பிரிவினால் 2010ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. டிஜிட்டல் வரைபடங்களை தயாரித்தல், மற்றும் அச்சுப் பணிகள், 2011ஆம் ஆண்டில் முதல் அரைப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்ட உத்தியோகத்தராக திருமதி. அஜித் பிரேமா (நிலச்சரிதவியல்) திரு. டி.எம்.டி.எஸ். விஜேசுந்தர (புவிச்சரிதவியல்) திரு. சி.என். பி. விஜேரத்ன மற்றும் திரு. ரி. நந்ததாச (வரைபட கலைஞர்) ஆகியோர் பணியாற்றுகின்றனர்.



## 1:500இ000 அளவினைக் கொண்ட இலங்கை வரைபடமொன்றை தயாரித்தல்:

1:100,000 அளவிலான புவிச்சரிதவியல் வரைபடமொன்றை தயாரித்தல் (பிரதானமாக கேம்பிரியன் யுக எட்டு பரிமாண) பணிகள் பூர்த்தியடையும் தருவாயில் உள்ளன. எனவே வெளியிடப்பட்டுள்ள 1:100,000 அளவிலான வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு 1:500,000 அளவினைக் கொண்ட இலங்கை நிலத்தோற்ற வரைபடமொன்றை தயாரிக்க திட்டமிடப்பட்டது. 2011இல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2011ஆம் வருடம் முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இந்த பணியில் திருமதி அஜித் பிரேமா (புவிச்சரிதவியல்) மற்றும் எஸ். கருணாநிதி (திட்டவரைஞர்) ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டனர். ஆரம்பத்தில் 1:250,000 அளவுள்ள புவிச்சரிதவியல் வரைபடங்கள் (04 பிரிவுகளைக் கொண்டவை) தயாரிக்கப்பட்டன. இதற்காக 1:100,000 அளவிலான புவிச்சரிதவியல் வரைபடங்களைில் உள்ள தரவுகள் பயன்படுத்தப்பட்டன. நெறிப்படுத்தல் குழுவினால் திருத்தங்களை செய்வதற்கும் அதன் பின்னர் இவற்றை அச்சிடவும் முடியும்.

## விபரமான வரைபடம் மற்றும் விபர ஆய்வுக் கட்டுரைகளை தயாரித்தல்:

வெளியிடப்பட்ட 1:100,000 அளவிலான புவிச்சரிதவியல் வரைபடங்களில் எடுத்துக்காட்டப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக மிகவும் சுருக்கமான புவிச்சரிதவியல் தகவல்கள் உள்ளடங்குகின்ற போதிலும் அந்த பிரதேசங்கள் தொடர்பாக மிகவும் குறுகிய புவிச்சரிதவியல் தகவல்கள் பல உள்ளடக்கப்பட்டிருப்பினும் அந்த பிரதேசங்களில் கற்கள் தொடர்பான விஞ்ஞான ரீதியிலான விடயங்களும் கற்பாறை உள்ளடக்கம் மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியிலான தகவல்கள் அதில் உள்ளடக்கப்படவில்லை. இதனால் முன்னோடி கருத்திட்டங்களின் முதற் தொகுதியாக கொழும்பு - இரத்தினபுரி வரைபடம் விபரமான வரைபடமாக தயாரிக்கப்படல் 2010இல் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. இந்த பணியுடன் தொடர்பான உத்தியோகத்தர்களாக திரு. கலாநிதி டப்ளியூ.கே.பீ. என். பிரேம் (பதில் பிரதிப் பணிப்பாளர் புவிச்சரிதவியல்) ஏ.எம்.எம். ரத்நாயக்க (புவிச்சரிதவியல்) ஆகியோர் விளங்கினார்கள். வரைபடங்களை தயாரிக்கும் பணிகள் 2011இல் பூர்த்தியடைந்ததுடன் ஆய்வுகூட பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

## நான்கு சம பகுதிகளைக் கொண்ட வரைபடங்களை தயாரித்தல்:

புவிச்சரிதவியல் வரலாற்றில் நான்கு சம பகுதிகளைக் கொண்ட காலகட்டம் 2 மில்லியன் ஆண்டுகளையும் கடந்து செல்கின்றது. இலங்கையில் நான்கு சம பங்கினைக் கொண்ட கூடங்கள் நிர்மாணப்பதில் பிரதானமாக கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சம வெளிகளில் சகல மட்டங்களிலும் மற்றும் மண் உருவாகுதல் ஆகியவற்றுக்கு வரையறுக்கப்பட்டதாக அமையும். எவ்வாறாயினும் இந்த நில உருவாக்கத்துக்குள் பொருளாதார ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த களிமண், மணல்கள், முருகைக்கற்கள் படிமங்கள், செழிப்பான மண் மற்றும் நிலக்கீழ் நீர் என்பன அடங்குகின்றன.

நான்கு சமபங்கினைக் கொண்ட புவிச்சரிதவியல் வரைபடங்கள் என்ற தலைப்பிலான கருத்திட்டமொன்று புவிச்சரிதவியல் ஆய்வு, சுரங்கப் பணியகத்தினால் 2008 இல் ஆரம்பிக்கப்பட்டது. களுத்துறை மற்றும் பலபிட்டிய - அம்பலாங்கொட 1:50,000 அளவிலான வரைபடங்களை தயாரிக்கும் வெளிக்கள நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. பத்தலுஓயா வரைபட தயாரிப்பு வெளிப்பளப் பணிகள் மற்றும் சிலாபம் 1: 50இ000 அளவிலான நான்கு சமப்பங்கினைக் கொண்ட வரைபடங்களை தயாரிக்கும் பணிகளில் அதற்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் (கலாநிதி ஸ்டரின் பெர்னாந்து) திடீர் விபத்துக்குள்ளானதால் இதற்கு தடை ஏற்பட்டது.

## மண் புவி இரசாயனவியல் (மண்தொடர்பான புவி இரசாயனவியல்) வரைபடங்களை தயாரித்தல்

மண்ணால் புவி இரசாயன பதார்த்தங்கள் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்வதற்காக மண் புவி இரசாயன வரைபட நிகழ்ச்சித்திட்டம் 2006இல் ஆரம்பிக்கப்பட்டது. கனிப்பொருள் ஆய்வு, சூழல் நிலைமைகள் தொடர்பான ஆய்வு, விவசாய ஆராய்ச்சி மற்றும் புவி - சுகாதார தொல்லைகள் தொடர்பான பணிகளுக்கு இந்த வரைபடங்கள் மிகவும் பயன்படும் புவி இரசாயனவியல் நிகழ்ச்சித்திட்டம் 1:50,000 அளவிலான தள வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றது. வரைபட இல. 88 அம்பாந்தோட்டை வரைபட இல. 69, பதுளை வரைபட இல. 31 அநுராதபுரம் என்பவற்றின் வெளிக்களப் பணிகளும் நில இரசாயன பகுப்பாய்வு நடவடிக்கைகள் தற்போதுள்ள அணு உறிஞல் நிறமாலை உபகரணத்தை பயன்படுத்தி பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் மூலப்பொருட்களுக்காக கருத்திட்டம் தொடர்பான அடிப்படை வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அணு உறிஞல் நிறமாலை உபகரண முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யக்கூடிய பல இரசாயன மூலக் கூறுகள் இருப்பதனால் கூடியளவிலான மூலப்பொருட்கள் பலவற்றை பகுப்பாய்வு செய்யக்கூடிய வேகமான பகுப்பாய்வு உபகரணமொன்றைப் பயன்படுத்தி அந்த மாதிரிகளை மீண்டும் ஒரு தடவை பகுப்பாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டது. இந்த திட்டத்துக்கு உதவுவதற்காக அணு உறிஞல் நிறமாலை உபகரணம் மூலம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் திட்டமிடப்பட்டது.

இதன்படி 2012 பெப்ருவரி மாதம் 16,000,000/= ரூபா செலவிடப்பட்டு அந்த உபகரணம் பொருத்தப்பட்டது. இந்த உபகரணத்தை பரிசீலிக்கும் பணிகள் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டதுடன் மேற்கூறிய வரைபடத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து

சேகரிக்கப்பட்ட மாதிரிகளை மேலதிக மூலப்பொருட்கள் இருக்கின்றதா என்பதை பரிசீலிப்பதற்காக மீண்டும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. பதவிய மற்றும் திபொல் கொட்டிய வரைபடங்களுள் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களில் வெளிக்கள பணிகள் (மண் மாதிரிகளை சேகரித்தல்) 2011இல் பூர்த்தி செய்யப்பட்டன.

## மண் தொடர்பான புவி இரசாயன வரைபடத் தயாரிப்பில் சம்பந்தப்பட்ட பதவியணியினர் பின்வருமாறு

| வரைபடங்கள் | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் |
|---|---|
| வரைபட இல. : பதவிய | திரு. எச்.ஏ.டி.என். சஞ்ஜீவ (புவிச்சரிதவியலாளர்) |
| வரைபட இல. திம்பொல்கெட்டிய | திரு. எம்.பி.எம். டி சில்வா (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)<br>திரு. டி.எம்.எஸ்.திசாநாயக்க (புவிச்சரிதவியலாளர்) |
| பகுப்பாய்வுகூடம் | செல்வி. எஸ். சிறிவர்தன (தலைமை இரசாயனவியலாளர்)<br>செல்வி. பி. ஜயலத் (இரசாயனவியலாளர்)<br>செல்வி. விந்தியா வனசிங்ஹ (இரசாயனவியலாளர்)<br>செல்வி. என். ரத்நாயக்க (இரசாயனவியலாளர்) |

## புவிச்சரிதவியல் அவதானிப்பு கட்டமைப்பொன்றை புதுப்பித்தலும் நில அதிர்வு / சுனாமி முன்னெச்சரிக்கைவிடுத்தல் நிலையமொன்றையும் ஆரம்பித்தல்

இலங்கைக்குள் மற்றும் அதனைச் சுற்றி நில அதிர்வு பரிசீலனைகளுக்கான பணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்காக மற்றும் அத்தகைய விபத்துக்களினால் ஏற்படும் பாதிப்பினை குறைப்பதற்காகவும் தொல்லைகளை குறைப்பதற்கான பணிகளுக்கு தேவைப்படுகின்றது. ஜேர்மனியின் புவியியல் ஆய்வு நிலையத்தின் அனுசரணை உதவியுடன் புவிச்சரிதவியல் துறையில் தற்போதைய அவதானிப்பு பணிகளை நவீனமயப்படுத்துவதற்கு புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்துக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. கடந்த வருடம் இரு தரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ஜேர்மன் நாட்டு நிபுணர்களுடன் இணைந்து சாத்திய கற்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மிஹிந்தளை தொகுதியில் மகாகந்தராவ மற்றும் ஹக்மன ஆகிய பிரதேசங்களில் இரண்டு நில அதிர்வு மானிகள் பொருத்தப்பட்டன. இந்த திட்டத்துடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களாக செல்வி. எஸ்.என்.பி. தல்தென (புவிச்சரிதவியலாளர்) மற்றும் திரு. எஸ்.டப்ளியூ. எம். செனவிரத்ன (புவிச்சரிதவியலாளர்) என்பவர்கள் விளங்கினார்கள்.

மஹகந்தராவ (MALK) மற்றும் ஹக்மன (HALK) நிலையங்கள் இந்தோனேசியாவின் சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் ஏதேனும் சம்பவத்துக்குப் பின்னர் சுனாமி நிலைமை ஏற்படுமா என்பதை தீர்மானிப்பதற்காக இந்த நிலையங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் விஞ்ஞானிகளினால் பயன்படுத்த முடியும். ஒத்துழைப்புக்கான கருத்திட்டத்தின் கீழ் இந்தோனேசியா நில அதிர்வு கட்டமைப்பில் உள்ள ஏனைய நிலையங்களிலிருந்து கிடைக்கும் தரவுகளையும் இலங்கைக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

## கனிப்பொருட்கள் தொடர்பாக 2011ஆம் ஆண்டக்கான வருடாந்த நூலும் ஏனைய வெளியீடுகளும்

2011 கலண்டர் ஆண்டினுள் கனிப்பொருள் உற்பத்தி, நுகர்வு, உள்நாட்டு கனிப்பொருள் ஏற்றுமதி மற்றும் கனிப்பொருள் இறக்குமதி தொடர்பான புள்ளிவிபரங்கள் இந்த வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கனிப்பொருட்கள் தொடர்பான வருடாந்த நூல் - 2011 அதே ஆண்டில் வெளியிடப்பட்டது. கனிப்பொருட்கள் தொடர்பான வருடாந்த அறிக்கை - 2011இல் திரு. டி.எம்.கே. தசாநாயக்க (தரவுகள் முகாமைத்துவ நிறைவேற்றுனர்) திரு. பிரதிப் விக்கிரமசிங்க (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) திரு. பிரியந்த மனவன்ச (எழுதுநர்) திரு. சுதர்மா விதான (எழுதுநர்) ஆகியோரினால் கலாநிதி டப்ளியூ.கே.பி.என். பிரேமின் (பிரதி பணிப்பாளர்) மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றது.

இலங்கையின் புவியியல் ஆய்வுப் பணிகள் தொடர்பான வரலாறு என்ற பெயரில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் திரு. எல். கே. செனவிரத்னவினால் எழுதப்பட்ட நூலும் கனிப்பொருள் தொடர்பான - 2011 நூலும் கௌரவ சூழல் பாதுகாப்பு அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போது வெளியிடப்பட்டது.

## வருமானம் சம்பாதிப்பதற்கான கருத்திட்டம்

### மஹாநாம பரல் கற்கள் படிமங்கள் தொடர்பான ஆய்வு:

மஹநாம பரல் கற்கள் படிமங்கள் தொடர்பான ஆய்வுப் பணிகள் வரையறுக்கப்பட்ட டுசுகாசா கோபோ நிறுவனத்தின் வேண்டுகோளுக்கமைய வெளிக்கள வரைபடங்களை தயாரித்தல், துளையிடுதல், புவி பௌதீக ஆய்வு மற்றும் வைரக்கற்களை துளையிடுதல் என்பவற்றை உள்ளடக்கிய பூரண ஆய்வொன்றினை மேற்கொள்ளல், 2011இல் பொறுப்பெற்கப்பட்டது. இதனுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள் திரு. ஏ.எஸ். ஜயகொடி (புவிச்சரிதவியலாளர்) திரு. ஆர்.எம். எம். ரத்நாயக்க (புவிச்சரிதவியலாளர்) திரு. எஸ்.ரி. களுபண்டார (புவிச்சரிதவியலாளர்) திரு. எஸ்.என். டி சில்வா (புவிச்சரிதவியலாளர்) திரு. எம். பத்மசிறி (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்) மற்றும் திரு. சமரா குனமுனி (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோர் ஆவர். துளையிடுதல் மற்றும் நகல் அறிக்கையை தயாரித்தல் தொடாபான வெளிக்களப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இந்த ஆய்வுப் பணியில் 2011இல் சம்பாதிக்கப்பட்ட வருமானம் ரூபா. 2,800,000/= ஆகும்.

### களுகங்கை ஆற்றங்கரை அணைக்கட்டு மற்றும் சுரங்க அடையாளங்கள் உள்ள பிரதேசத்தில் வைரக்கற்களுக்கான துளையிடும் ஆய்வுப் பணிகள்

மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் மற்றும் வரையறுக்கப்பட்ட லாஹ்மெயர் சர்வதேச கம்பனியின் (இந்த கருத்திட்டத்தின் ஆலோசகர்) வேண்டுகோளுக்கமைய களுகங்கைக்கு குறுக்காக அணைக்கட்டொன்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தின் தகைமையை ஆராய்ந்து பார்ப்பதற்காக துளையிட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும் பணிகள் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. இந்த ஆய்வின்போது 550 மீற்றர் அளவுள்ள பிரதேசத்தில் 13 துவாரங்கள் துளையிடப்பட்டன.

2011இல் இந்த திட்டத்தின் மூலம் சம்பாதித்த பணம் 8,000,000/= ரூபாவாகும்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் 1:50,000 அளவுள்ள திருகோணமலையில் மற்றும் கம்படை வரைபடங்களில் பிரதேசத்தில் கரையோரப் பகுதியில் கனியமணல் தொடர்பான ஆய்வு வரையறுக்கப்பட்ட தம்சிலா நிறுவனத்தின் வேண்டுகோளுக்கமைய இந்த கருத்திட்டத்தை முன்னெடுக்க ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2010 இல் வெளிக்கள பணிகள் பூர்த்தியடைந்தவுடன் சேகரிக்கப்பட்ட 550 மணல் மாதிரிகள் தொடர்பான கனிம விஞ்ஞான ஆய்வுகள் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கருத்திட்டத்தின் மூலம் 2011இல் சம்பாதிக்கப்பட்ட வருமானம் 600,000/= ரூபாவாகும்.

### ஹோல்சிட்டி லங்கா நிறுவனத்துக்காக அச்சுவேலியில் களிமண் படிமத்தை துளையிடும் பணிகள்

அச்சுவேலிப் பிரதேசத்தில் 35 ஆழமில்லா துளையிடுதல்கள் இடம்பெற்றதுடன் பொம்ப் பண்ணும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கான துளையிடும் பணிகள் 2011இல் ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்டன. இந்த கருத்திட்டத்தில் வருடாந்தம் 6,500,000/= ரூபா சம்பாதிக்கப்பட்டது.

### பூநகரி பிரதேசத்தில் மயோனின் கால சுண்ணாம்புக் கற்களை ஆய்வு செய்யும் பணிகள்

வடக்கின் வசந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுண்ணாம்பு வளத்தை மதிப்பீடு செய்யும் திட்டத்தின் கீழ் சுண்ணாம்புக் கல் படிமங்களை மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கும் பிரதேசங்களில் துளையிடும் பரிசீலனைகள் சில மேற்கொள்ளப்பட்டன. 2010 ஆம் ஆண்டு ஜுலை - செப்டெம்பர் மாதங்களில் 209.8 மீற்றர் பரப்பளவுள்ள பிரதேசத்தில் 50 துளைகள் இடப்பட்டன. சுண்ணாம்புக்கல் மாதிரிகளின் இரசாயன பகுப்பாய்வு நடவடிக்கைகள் 2011இல் பூர்த்தி செய்யப்பட்டன. நிலத்தின் கீழ் சிறந்த தரத்திலான சுண்ணாம்புக் கற்கள் இருப்பதை ஆய்வுகளின் மூலம் அறியமுடிந்தது.

### மொரகஹகந்தை வைரக் கற்கள் துளையிடுதல்

அணைக்கட்டினை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதேசத்தின் தெற்கு கரையில் துளையிடும் பணிகள் மத்திய பொறியியலாளர் ஆலோசனைக் குழுவின் வேண்டுகோளுக்கு அமைய மேற்கொள்ள பொறுப்பெற்கப்பட்டது. 2010 செப்டெம்பர் மாதம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2011இல் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த பணியில் திரு. ஏ.எஸ். ஜயகொடி (புவிச்சரிதவியலாளர்) திரு. கே.எஸ்.ஸே. பர்னாந்து (துளையிடும் நிறைவேற்றுனர்) மற்றும் திரு. பலிகஹதெனிய (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோர் ஈடுபட்டனர்.

### கனிப்பொருள் ஆய்வுப் பணிகள்

வரையறுக்கப்பட்ட எல்வெம் லங்கா தனியார் கம்பனி மற்றும் தமசிலா தனியார் கம்பனி என்பன இரண்டு தனியார் நிறுவனங்களாகும். இவர்களது வேண்டுகோளுக்கமைய வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளில் கனிம மண் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வினை திரு. எஸ். எம். களுபண்டார (புவிச்சரிதவியலாளர்) மற்றும் திரு. டி.எம்.எஸ். திசாநாயக்க (புவிச்சரிதவியலாளர்) ஆகியோர் மேற்கொண்டனர்.

## கனிம புலனாய்வு பிரிவு

கனிம முதலீட்டு ஒப்பந்தங்கள், கனிம கொள்கைகள், ஆய்வுக்கான யோசனைகள் தொடர்பான பணிகள் சம்பந்தமாக குறிப்பிட்ட பிரிவினருடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளல் போன்ற பணிகள் கனிம புலனாய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

## விஞ்ஞான ஆய்வு கூடத்தை புதுப்பித்தல்

தற்போதுள்ள ஆய்வுகூடங்களின் வசதிகளை நவீனமயப்படுத்தும் பிரதான நடவடிக்கையாக புதிய உபகரணங்கள் சில புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டது. பகுப்பாய்வு ஆய்வு கூடத்துக்கு 16,500,000/= ரூபா செலவிடப்பட்டு பெற்றுக்கொடுக்கப்பட்ட பிளஸ்மா பார்வை வெளிபாட்டு நிறமாலை ஆய்வுக்கருவி இயந்திரமும் மற்றும் பகுப்பாய்வு விஞ்ஞான ஆய்வுகூடத்துக்கு வழங்கப்பட்ட புதிய உபகரணமும் இதில் அடங்குகின்றது. காந்த மாணி (GEM-19)இ யுடீநுஆ டெராமீற்றர் (S 800) என்பன புவி பௌதீக ஆய்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டன.

## நூலக சேவை பணிகளும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும்

2011ஆம் ஆண்டில் விஞ்ஞான சஞ்சிகைகள், புதிய நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக பணியகத்தினால் 2,800,000/= ரூபா செலவிடப்பட்டது. சுரங்க அறிவூட்டல் என்ற சஞ்சிகையின் மூன்று பருவ மலர்கள் தயாரிக்கப்பட்டதுடன் நாட்டில் உள்ள பிரதான தொழில்நுட்பக் கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய மென்பாகம் மற்றும் நூலக புத்தகங்களுக்கான புதிய நிரல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்தல் என்பவற்றின் நூலக வசதிகள் கணினிமயப்படுத்தப்பட்டன. நூல்களின் பெயர்கள் தற்போது பதியப்பட்டு வருகின்றன. பாடசாலைகள், புவிச்சரிதவியல் சங்கம் மற்றும் ஏனைய பலதரப்பட்ட சங்கங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட காட்சிக்கூடங்கள் பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சிகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் பலவற்றில் பணியகம் கலந்து கொண்டது.

பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட காட்சிக்கூடங்கள் பிரபல்யம் அடைந்ததுடன் சிறந்த முறையில் அவற்றின் மூலம் தகவல்களையும் பெறமுடிந்து தன்திரிமலை ஓயா மடுவில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் ஒழுங்க செய்யப்பட்ட காட்சிக்கூடங்கள் மக்களின் மனதை கவர்ந்தன.

## வேறு பணிகள்

கணினிகள் தொடர்பான உதிரிப்பாகங்களை பேணுதல், மற்றும் இணையத்தளத்தை பேணுவது தொடாபான நாளாந்த பணிகள் திரு. டி.எம். தசாநாயக்க (தரவு முகாமை நிறைவேற்றாளர்) திரு. பிரதீப் விக்ரமசிங்க (தொழில்நுட்பக உத்தியோகத்தர்-தகவல் தொழில்நுட்பம்) மற்றும் புத்திக மாரபன தொழில்நுட்ப உத்தியோகத்தர்-தகவல்) ஆகியொரினால் மேற்கொள்ளப் பட்டது. பிராந்திய அலுவலகங்களின் வசதிகள் பேணல், மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகளில் இவர்கள் வேறு அரச நிறுவனங்கள் கலந்து கொண்ட அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், கண்காட்சிகள், செயலமர்வுகள் என்பவற்றிலும் புவிச்சரிதவியல் உத்தியோகத்தர்கள் தமது பங்களிப்பினை வழங்கினார்கள்.

## வெளிநாட்டு கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வு மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளல

- திரு. சி.எச்.ஈ.ஆர். சிறிவர்தன (புவிச்சரிதவியலாளர்) அமெரிக்காவின் கென்ட் பல்கலைக் கழகத்தில் தனது கலாநிதி பட்டத்துக்கான படிப்பினை மேற்கொண்டதுடன் கலாநிதி பி.என். ரணசிங்க கெனட்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்ததன் பின்னர் சமுத்திரவியல் தொடர்பான வூட்ஸ்ஹோல் நிறவனத்தில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- செல்வி. சந்திம பர்னாந்து நெதர்லாந்தின் ஐ.ரி.சி. நிறுவனத்தில் தனது விஞ்ஞான முதுமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.
- திரு. எஸ்.என்.டி. சில்வா (புவி பௌதீகவியலாளர்) 2011 மே மாதம் 16ஆந் திகதி தொடக்கம் 19ஆந் திகதி வரை ,ரான் இஸ்லாமிய குடியரசில் தெஹ்ரானில் நடைபெற்ற நில அதிர்வியல் மற்றும் நில அதிர்வு பொறியியல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் கலந்து கொண்டார்.
- 2011 ஜூன் மாதம் 08ஆந் திகதி தொடக்கம் 27ஆந் திகதிவரை தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற பிராந்திய பல்லிடர் முன்னெச்சரிக்கை விடுத்தல் கூட்டமைப்பின் சேவை நிலைய நிகழ்ச்சித்திட்டத்தில் அழைக்கப்பட்ட விஞ்ஞானியாக செல்வி. எஸ்.என்.பி. தல்தென கலந்து கொண்டார்.
- 2011 ஜூன் மாதம் 20ஆந் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 08ஆந் திகதிவரை ஒஸ்ரியாவின் படெனில் நடைபெற்ற வியன்ன அணு பரிசோதனை தடைசெய்தல் தொடாபான அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட உயர்மட்ட ஆராய்ச்சி பயிற்சி நெறியில் கலாநிதி டப்ளியூ.கே.பி.என். பிரேம் (பிரதிப் பணிப்பாளர் - புவிச்சரிதவியல்) திரு. எஸ்.என்.டி சில்வா (பௌதீகவியலாளர்) செல்வி டி.ரி.டி. டி. விஜேசுந்தர (பௌதீகவியலாளர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

- 2011 செப்டெம்பர் மாதம் 19ஆந் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 21ஈந் திகதி வரை நடைபெற்ற ஜேர்மனியின் பொட்ஸ்வனில் உள்ள ஹெல்மோல்ட்ஸ் நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட புவிச்சரிதவியல், புவி தரவுகள் பகுப்பாய்வு இடர் மதிப்பீடு மற்றும் ஆபத்து நிலைமைகளை தவிர்த்தல் தொடர்பான சர்வதேச பயிற்சி நெறியில் திரு. எஸ். டப்ளியூ.எம். செனவிரத்ன கலந்து கொண்டர்.
- 2011 ஒக்டோபர் மாதம் 17ஆந் திகதி தொடக்கம் 21ஆந் திபதிவரை இந்தியாவின் கேரளா மானிலத்தின் திருவானந்த புரத்தில் நடைபெற்ற தொழில்நுட்பவியலாளர் கூட்டத்தில் திரு. கே.ரி.யு.எஸ். டி. சில்வா (உதவிப்பணிப்பாளர்) கலந்து கொண்டார்.
- 2011 நவம்பர் மாதம் 12ஆந் திகதி தொடக்கம் 20ஆந் திகதி வரை யப்பானின் டோக்கியோவின் துருவ ஆராய்ச்சி தொடர்பான தேசிய நிறுவனத்தில் நடைபெற்ற துருவ புவிச்சரிதவியல் தொடர்பான சம்மேளனத்தில் கலாநிதி டப்ளியூ.கே.பி. பிரேம் (பிரதி பணிப்பாளர்) கலந்து கொண்டார்.
- **2011 டிசெம்பர் மாதம் 16ஆந் திகதி தொடக்கம் 17ஆந் திபதி வரை இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற நிலநடுக்க அனர்த்த மதிப்பீடு தொடர்பான சார்க் நிபுணர் குழுவின் கூட்டத்தில் கலாநிதி டப்ளியூ.கே.பி. பிரேம் (பிரதிப் பணிப்பாளர் நாயகம்) கலந்து கொண்டார்.**

## ஆய்வுகூட சேவைகள்

### அ) பகுப்பாய்வு கூடம் சேவைகள

இலங்கையின் சிலிகேட் பகுப்பாய்வு மூலோபாயம் தொடர்பாக புவிச்சரிதவியல் ஆய்வு நிலையத்தின் பகுப்பாய்வு விஞ்ஞான ஆய்வுகூடம் முன்னணி வகித்து செயற்பட்டது. 5 தசாப்த காலத்துக்கு அதிகமாக கைத்தொழில் மற்றும் விஞ்ஞான ஆய்வுகள் வர்த்தக நிறுவனங்களுக்கு சிறந்த தரத்திலான பகுப்பாய்வு சேவைகளை நாங்கள் வழங்கி வருகின்றோம்.

கற்கள், கணிமங்கள், நிலக்கீழ் நீர், மேற்பரப்பில் உள்ள நீர், கைத்தொழில் கழிவுப் பொருட்கள் மற்றும் வேறு பொருட்கள் தொடர்பாக சரியானதும் நம்பகத்தன்மை மிக்கதுமான இரசாயனப் பகுப்பாய்வுகள் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொண்ட மூலோபாயங்கள் மற்றும் தரங்களுக்கமைய இடம்பெறுவதுடன் மிகவும் போட்டா போட்டி விலைகளின் அடிப்படையில் ஆய்வுகூடத்தில் வழங்கப்படுகின்றது.

### பிரதான பணிகள்

பின்வரும் துறைகளில் அடிப்படை உயிர் இரசாயனப் பகுப்பாய்வு இடம்பெறுகின்றது.

- கனிம கைத்தொழில் - மூலப்பொருட்களை பரிசிலித்தல்
- நீரின் தரத்தை பரிசோதித்தல்
- இரசாயன வரைபடங்களை தயாரித்தலும் பகுப்பாய்வும்
- சூழல் தரப் பேணலை அடிக்கடி மதிப்பிடுதல்

பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற படிப்பவர்கள் பட்டப்பின் பட்டம் கற்பவர்கள் குறிப்பிட்ட அரச துறையின் திணைக்களங்ளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிலையமாகவும் இது விளங்குகின்றது.

## வழிமுறைகளும் உபகரண கட்டமைப்பும்

- தவறுகள் ஏற்படாத தங்ஸ்டன் கார்பயிட் அரைத்தல் இயந்திரங்கள் மூலம் தூலாக்குதல்
- சம்பிரதாய சிலிகேட் வழிமுறை/ நவீன மைக்ரோவேவ் வழிமுறை
- கெற்றனக்ஸ் பிளக்ஸர் ஒன்றைப் பயன்படுத்தி எக்ஸ்ரே மீள் உற்பத்தி பகுப்பாய்வினை மேற்கொள்ளல்.
- பிரதான சிறியளவிலான சில அரிதான மண் சார்ந்த 25 க்கும் அதிகமான மூலம் பொருட்களை இனங்காணுவதற்காக தீப்பிழம்பு சூழை அணு உறிஞல் வெளிப்பாட்டு நிறமாலை ஆய்வுக்கருவி பெரும்பாலான மூலம் பெருட்களில் அவற்றை காணலாம். ஒரு பில்லியன் அளவிலிரந்து அதன் வீத அளவினை காண்பிப்பதற்காக விரிவான பகுப்பாய்வு பரந்தெல்லையொன்று இந்த வழிமுறையில் உள்வாங்கப்பட்டுள்ளது.
- ஆசனிக், செலேனியம், அன்டிமனி மற்றும் சில்வர் போன்ற உலொகமல்லாத மூலப் பொருட்களை பகுப்பாய்வு செயற்வதற்கான ஹய்ட்ரைட் உற்பத்தி.
- பொஸ்பேட், புளோரைட், க்லோரைட், நைட்ரேட் போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதற்காக ஊதா நிற கட்புல வெளிப்பாட்டு நிறமாலை ஆய்வுக்கருவி மூலமான பகுப்பாய்வு.
- தற்போதுள்ள பொதும்பாலான உபகரணங்களுக்கு அடுப்பு சூளை ஒக்சிசன் வெப்பகடத்தி உப்புத் தன்மையை அளக்கும் கருவி.
- புவிச்சரிதவியல் மற்றும் சூழல் சார் பொருட்களில் 60 க்கும் மேற்பட்ட மூலம் பொருட்களை ஒரே தடவையில் பகுப்பாய்வு செய்வதற்கான ஆற்றல் உள்ள உயர் வீச்சினைக் கொண்ட ஒளி, உயர்தர திரவத் தன்மையைக் கொண்ட ஹைட்ரைட் உற்பத்தி கட்டமைப்பு, ஆவி வெளியேற்று கட்டமைப்பினைக் கொண்ட வெளிபாட்டு நிறமாலை ஆய்வுக்கருவி.

## ஆ) கற்பாறை விஞ்ஞான ஆய்வுகூடம் ளுநசஎைஉநள

### சேவைகள்

கனிமப் பொருட்களை அளவீட்டளவில் வகைப்படுத்தல் உள்ளடங்கலாக இலங்கையில் மண் தொடர்பான பகுப்பாய்வு வழிமுறைகள் தொடர்பாக மண் விஞ்ஞான ஆய்வுகூடம் முன்னுரிமை பெற்று விளங்குகின்றது. 50 ஆண்டுகளுக்கு மேற்பட்டகாலமாக சேவையாற்றி வருகின்றொம்.

ஆகக்கூடிய போட்டா போட்டி விலைகளின் அடிப்படையில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளை பயன்படுத்தி மண், கனிமம் இருப்பதாவது மண், மற்றும் அதற்கு சமனான மூலப்பொருட்கள் தொடர்பாக சரியான கனிம விஞ்ஞான, மண் விஞ்ஞான பகுப்பாய்வு இந்த ஆய்வுகூடம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

### பிரதான பணிகள்

பின்வரும் விடயங்களுக்காக அடிப்படை மற்றும் உயர் மட்டத்திலான கனிம விஞ்ஞான, மண் விஞ்ஞான பகுப்பாய்வுகள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன.

- புவிச்சரிதவியல் ஆய்வு - புவிச்சரிதவியல் வரைபடங்களை தயாரித்தல் - கனிம ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள்
- கனிமம் சார்ந்த கைத்தொழில் பிரிவுக்காக கனிப்பொருட்களை ஆய்வு செய்தல்
- பொதுமக்களுக்காக மண் பரிசீலனைகளும் இனம்காணுதல்
- பொது மக்களுக்காக மண்ணில் உள்ள கனிமப் பொருட்களை இனங்காணுதலும் மதிப்பிடுதலும்

## நாம் ஏன் விசேடமானவர்களாக இருக்கின்றோம்.

| | |
|---|---|
| நம்பகத்தன்மை | :சேவை பெறுபவர்களுக்கு நம்பகத்தன்மையான சேவைகளை வழங்கக் கூடியமை |
| செல்லுபடியாகும் தன்மை | :எமது நிபுனர் குழுவினால் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செல்லுபடியான அறிக்கைகளை வழங்குகின்றது. |
| செயன்திறன்: | மிகவும் நவீனமான அறிக்கைகளை வழங்ககின்றது. |
| ஏற்கக்கூடிய கட்டணங்கள | :ஒப்பீட்டளவில் குறைந்த கட்டணங்கள் |
| நன்மதிப்பு | :நாட்டில் மண், மற்றும் கனிமப்பொருட்களை பகுப்பாய்வு செயட்தல் என்பவற்றுக்கான தகுந்த ஆய்வு கூடமாக புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் விளங்குகின்றது. |

## வழிமுறைகளும் உபகரண கட்டமைப்புக்களும்

- செவ்வனே இயங்கும் இயந்திர அரிவாள் பாறைகளை தொடும் இயந்திரம் என்பவற்றைப் பயன்படுத்தி பாறைகள் உலோகங்கள் என்பவற்றின் சிறந்த தரத்திலான பக்கவெட்டு முகத்தோற்றம், மற்றும் செப்பனிட்ட பக்கவெட்டினை தயாரித்தல்
- ஒலிம்பஸ் பாறை விஞ்ஞான குவிவாடிகளை பயன்படுத்தி மெல்லிய பக்க வெட்டு மற்றும் செப்பனிட்ட பக்க வெட்டினை தயாரித்தல்
- மெல்லிய பக்கவெட்டுக்களில் நுணுக்கமான புகைப்படங்கள்
- பாரமான திரவ (ஈர்ப்பு) முறையைப் பயன்படுத்தி மணல், உலோகம் என்பவற்றில் உள்ள கனிம வகைகளை ஆராய்தல்.
- ஈர்ப்பு கனிமம், ப்ரொன்ட்ஸ் பிரிப்பாக்கியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பகுதியாக்கம்
- கள் அளவிலான மணல், மண், களிமண் என்பவற்றை பகிர்ந்தளிப்பதற்காக பி.எஸ். அரிதட்டு மற்றும் களிமண் - சேறு போன்றவற்றுக்கான பொருட்களை பிபெட் முறையை பயன்படுத்தல்.
- பௌதீக மற்றும் கட்புல முறைகளைப் பயன்படுத்தி கனிமப் பொருட்களை இனங்காணுதல்.
- பல்வகை அணல் பகுப்பாய்வு முறைமையைப் பயன்படுத்தி பாறை காபனேற்று மற்றும் களிமண்ணில் இருக்கும் களிமன் வகையினை இனங்காணுதல்.

## (இ) புவிச்சரிதவியல் ஆய்வுகூடம்

புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் புவிச்சரிதவியல் ஆய்வுகூடமானது நவீன உபகரணங்களையும் நவீன மென்பாக உபகரணங்களையும் கொண்டிருப்பதுடன் பரந்துபட்ட அளவிலான தகைமை மற்றும் அனுபவமுள்ள உத்தியோகத்தர்களினால் அது கையாளப்படுகின்றது. இந்த பிரிவின் மூலம் புவி மேற்பரப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்தி கனிம ஆய்வுகளை மேற்கொள்ளல், நிர்மாணப் பணிகளுக்காக துணை மேற்பரப்பு வடிவங்களை அடிப்படையாகக் கொண்ட புவி பௌதீக மாதிரிகளை தயாரித்தல், விசேடமாக நகர் புறங்களில் நிலத்துக்கடியில் உள்ள நீர் மாசடைதல் போன்ற சூழல் பிரச்சினைகள் தொடர்பாக தீர்வுகளை காணல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

புவிச்சரிதவியல் ஆய்வுகூடமானது தேசிய தேவைகளை செவ்வனே நிறைவேற்றும் வகையில் புவிச்சரிதவியல் தொடர்பான நவீன தரவுகளை சேகரிப்பதுடன் தரவுகளை தயாரிக்கும் ஆற்றலையும் விருத்தி செய்துள்ளதுடன் நில நடுக்கங்கள் தொடர்பாக ஜீ.பி.ஆர். அளவைகளையும் மேற்கொண்டுள்ளது.

## நாங்கள் ஏன் விசேடமானவர்களாக கருதுகின்றோம்.

நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடியான தன்மை:

நவீன தொழில்நுட்பம் மற்றும் நம்பகத் தன்மையிலான பதவியணியினரைப் பயன்படுத்தி நம்பிக்கையான செல்லுபடியான அறிக்கைகளை வழங்குதல்.

செயலாற்றுத்திமை:

முடிந்தளவில் குறுகிய நேரத்திற்குள் உரிய நேரத்தில் கடமையை செய்து கொடுத்தல்.

கட்டணங்களை ஏற்க்க முடியுமா என்பது:

ஒப்பீட்டளவில் குறைந்த கட்டணம்

நன்மதிப்பு:

இலங்கையில் பாறை விஞ்ஞான பகுப்பாய்வுத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடமாக புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் ஆய்வுகூடம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

# அகழ்வுப் பிரிவு

## அகழ்வுப் பிரிவின் பிரதான பணிகள்

14 பிரதேச அலுவலகங்களுடன் இணைந்து அகழ்வுப் பிரிவு நிகழ்காலத்தில் இயங்கி வருகின்றது. பலதரப்பட்ட வகையில் அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் சேவை பெறுபவர்களுக்கு எமது சேவைகளை வழங்குவதற்காக இந்த அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்க கனிம சட்டமூலத்துக்கமைய அண்மையில் சேர்க்கப்பட்ட திருத்தங்களுக்கு அமைய சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக பணியகத்துக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரதான பணிகளாக நிலப்பரிசோதனை, பரீட்சார்த்த வெடி வைத்து தகர்த்தல், மக்கள் முறைப்பாடுகளை ஆராய்தல், அகழ்வுப் பணிகள், வர்த்தகம், ஆய்வு மற்றும் ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். சட்டவிரோத அகழ்வுப் பணிகளை கட்டுப்படுத்தல் என்பன இதில் அடங்குகின்றன. அகழ்வுப் பிரிவின் பிரதான பணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- 1992ஆம் ஆண்டு 33ஆம் இலக்க சுரங்க கனிம சட்டத்தின் கீழ் கனிப்பொருட்களை தயாா்படுத்தல், ஏற்றுமதி என்பவற்றுக்காக அகழ்வுகளை மேற்கொள்ளல் மற்றும் வர்த்தக ரீதியிலான வெற்றியை மதிப்பிடுதல்.
- அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மூலம் கனிம ஆய்வு, அகழ்வு மற்றும் அவற்றை விற்பனை செய்தலும் ஏற்றுமதி செய்தலும்.
- வர்த்தக உற்பத்தி மேம்பாட்டுக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சுக்கு ஆலோசனை வழங்குதல்.

## பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்

- சுரங்கங்களை பரிசீலித்தல் (இடம்பெயர் சேவைகள், அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்)
- நிபுணத்துவ சேவைகள் (வெடிவைத்து தகர்க்கும் முறைகள், அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல், பாதுகாப்பு முறைகள் பரீட்சார்த்த வெடிவைத்து தகர்ப்புக்கள், நிலத்தில் வெடிப்புக்கள் ஏற்படல் தொடர்பாக பரிசிலனைகளை மேற்கொள்ளல்.)
- அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் (அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள மக்களுக்கான செயலமர்வு, கண்காட்சிகள்)
- புனரமைப்புப் பணிகள் (சூழல் பாதுகாப்பதற்காக சுரங்க பேணல் முறைகள், சூழல் பாதுகாப்பு பேணப்படகின்றதா என்பதை ஆராய்தல் மற்றும் சுரங்கப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு பணிகள்)

## சூழல் தொடர்பான தடைநீக்கம்

தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அனைத்து அகழ்வு மற்றும் கனிம பிரித்தெடுப்பு கருத்திட்டத்தினால் குறிப்பிட்டவாறு அடிப்படை சூழல் அறிக்கை அல்லது சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையை சமா்ப்பித்து தடைநீக்க சான்றிதழையும் பெற்றுக்கொள்ளலாம்.

‘ஏ’ பிரிவின் கீழ் அனைத்து அகழ்வுப் பணிகளுக்கும் சூழல் தடை நீக்க சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள்

- ஆய்வு அனுமதிப்பத்திரங்கள்
- அகழ்வு அனுமதிப் பத்திரங்கள்
- வியாபார அனுமதிப் பத்திரங்கள்
- ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்கள்
- ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்கள்

## அனுமதிப் பத்திரங்களும் விதிமுறைகளும்

1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்க கனிம சட்டத்தின் கீழ் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் 3 வகையான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவையாவன ஆய்வு அனுமதிப்பத்திரங்கள், அகழ்வு அனுமதிப்பத்திரங்கள், வர்த்தக மற்றும் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள்.

### அ) ஆய்வு அனுமதிப் பத்திரங்கள் (EL)

அனுமதிப் பத்திரங்கள் அனுமதி வழங்கப்படும் சகல கனிப்பொருட்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளும் உரிமைக்கான ஆய்வு அனுமதிப் பத்திரங்கள் மூலம் அனுமதிப் பத்திரம் பெருபவருக்கு வழங்கப்படும். 2008-2011 வரையிலான காலப் பகுதிக்குள் வழங்கப்பட்ட ஆய்வு அனுமதிப் பத்திரங்கள் பின்வருமாறு




ஆய்வு அனுமதிப் பத்திரங்கள் 21

## ஆ) அகழ்வு அனுமதிப் பத்திரம்

### தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வு அனுமதிப்பத்திரம் (AML)

10 ஹெக்டயருக்கு மேற்படாத பிரதேசத்தில் அல்லது 25 மீற்றருக்கு மேற்படாத ஆழத்துக்கு அனுமதிப் பத்திரத்தில் உரியவாறு குறிப்பிட்டுள்ள சகல கனிம அகழ்வுகளும் தயாரிப்பு மற்றும் வர்த்தகம் என்பவற்றை மேற்கொள்வதற்கான உரிமை இதன்மூலம் இந்த அனுமதிப் பத்திரத்தாரருக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். ஏ பிரிவு - பின்வரும் நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை இதில் அடங்கும்.

- அகழ்வு துவாரத்தில் 1.5 மீற்றர் ஆழத்துக்கு குறைந்தளவாக இருத்தல் வேண்டும்.
- மாதாந்த உற்பத்தி அளவு 100 கண மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும் மற்றும் 600 மீற்றருக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- இயந்திரங்கள் எதுவும் பயன்படுத்தப்படக்கூடாது

பி பிரிவு - பின்வரும் நிபந்தனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் இதில் இடங்கும்.

- துளையிடும் துவாரத்தின் ஆழம் 1.5 மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
- மாதாந்த உற்பத்தி 100 கன மீற்றருக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- இயந்திரங்கள் எதுவும் பயன்படுத்தப்படக்கூடாது

2008-2011 வரை காலகட்டத்துக்குள் வழங்கப்பட்ட காலகட்டத்துக்குள் வெளியிடப்பட்ட அகழ்வு அனுமதிப் பத்திரம் பின்வரும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.




தொழில் நுட்ப அகழ்வு அனுமதிப் பத்திரம்

ஏ பிரிவு - 1378 / பி பிரிவு - 2961

### தொழில்நுட்ப அகழ்வு அனுமதிப் பத்திரம் (IML)

அனுமதிப்பத்திரத்தினால் குறித்தவாறு காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள சகல கனிம அகழ்வுகளும் தயாரிப்புகளும் வர்த்தகத்தை மேற்கொள்ளும் உரிமையும் இந்த அனுமதிப் பத்திரம் மூலம் வழங்கப்படும் தொழில்நுட்ப அனுமதிப் பத்திரங்கள் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளன

- வெடிவைத்து தகர்க்கும் முறை - தாமதிக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி துவாரங்கள் பலவற்றை துளையிடுதல்.
- துளையிடும் துவாரத்தின் ஆழம் 3 மீற்றருக்கும் அதிகமாக இருத்தல் வேண்டும்.
- உற்பத்தியின் அளவு - மாதாந்த ஏற்பத்தியின் அளவு 1500 மீற்றருக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- பயன்படுத்தக் கூடிய இயந்திர உபகரணங்கள் - அணுகுவதற்கான துளையிடும் இயந்திரம், வாயு துளையிடும் இயந்திரம், கல் உடைக்கும் இயந்திரம் உட்பட வேறு இயந்திரங்கள்

பிரிவு பி (பின்வரும் நிபந்தனைகளில் ஒன்று அல்லது பல இதில் அடங்கும்.

- வெடிவைத்து தகர்க்கும் முறை - ஒரு துளையிடும் துவாரம்
- துவாரத்தின் ஆழம் - 1.5 மீற்றருக்கு குறையாத 3 மீற்றருக்கு மேற்படாதவை
- உற்பத்தியின் அளவு - 1500 கன மீற்றரையும் விட அதிகமாக இருத்தலாகாது.
- ஆழதுளையிடும் இயந்திரத்தை மாத்திரம் பயன்படுத்தல் வேண்டும்.

பிரிவு சி (பின்வரும் நிபந்தனைகளில் ஒன்று அல்லது பல இதில் அடங்கும

- வெடிவைத்து தகர்க்கும் முறை - ஒரு துளையிடும் துவாரம்
- துவாரத்தின் ஆழம் - 1.5 மீற்றருக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- உற்பத்தியின் அளவு - மாதாந்த உற்பத்தியின் அளவு 600 கன மீற்றரையும் விட குறைவாகும்.
- ஆழதுளையிடும் இயந்திரத்தை மாத்திரம் பயன்படுத்தல் வேண்டும்.

2008 - 2011 வரையிலான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட கைத்தொழில் அகழ்வு அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை பின்வருமாறு




கைத்தொழில் அனுமதிப் பத்திரங்கள்

பிரிவு A - 111 / பிரிவு B - 1189 / பிரிவு C - 1641

## விசேட வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் (RML)

விசேட வர்த்தக ஆய்வுகள், அகழ்வு, தயாரிப்பு மற்றும் வர்த்தகத்துக்கு அமைச்சரின் அனுமதியுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

## ஈ) வர்த்தக அனுமதிப் பத்திரங்கள் (TDL)

அனுமதிப் பத்திரங்களினால் வழங்கப்படும் கனிமப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக களஞ்சியப்படுத்துவதற்காக தயாரிப்பதற்கு வர்த்தகம் செய்வதற்கு மற்றும் பணிப்பாளரின் விசேட அனுமதிக்கமைய ஏற்றுமதி செய்வதற்காக விசேடமற்ற உரிமை வர்த்தக அனுமதிப்பத்திரம் மூலம் வழங்கப்படும்.

பிரிவு யு - கனிப்பொருட்களை ஏற்றுமதிக்காக விற்பனை செய்தல்

பிரிவு டீ - கனிப்பொருட்களை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்தல்

பிரிவு ஊ - கையினால் தயாரிக்கப்பட்ட செங்கற்கள் மற்றும் சுண்ணாம்பினை விற்பனை செய்தல்

2008 - 2011 வரையிலான காலகட்டத்துக்குள் வழங்கப்பட்ட வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் பின்வருமாறு




வர்த்தக அனுமதிப்பத்திரங்கள்

பிரிவு A - 18 / பிரிவு B - 863 / பிரிவு C - 00

## உ) ஏற்றிச்செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள்

கனிமம் சார்ந்த பொருட்கள் அல்லது கனிமப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திரமானது அனுமதிப்பத்திரத்தினால் உறுதியாக காணப்பட்டவாறான அளவுள்ள கனிமப் பொருட்களை அல்லது குறிப்பிடப்பட்டதோர் காலகட்டத்துக்குள் அகழ்வுகள் மற்றும் வர்த்தக அனுமதிப் பத்திரங்களுக்கான கனிமப் பொருட்கள் அல்லது கனிமம் சார்ந்த பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக போக்குவரத்து அனுமதிப்பத்திரமொன்று இருத்தல் வேண்டும்.

2008 - 2011 ஆண்டு வரையிலான காலகட்டத்துக்குள் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை பின்வருமாறு




ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள் 374,039

## ஊ) கனிமம் ஏற்றுமதி

அனைத்து ஆய்வுகள், அகழ்வுகள் மற்றும் வர்த்தக அனுமதிப் பத்திரங்களைப் பெற்றவர்கள் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட கனிமத்தை ஏற்றுமதி செய்வதற்காக புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக பணிப்பாளரின் விசேட அனுமதியைப் பெறவேண்டும்.

2008ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை காலகட்டத்துக்குள் வழங்கப்பட்ட ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்கள் பின்வருமாறு




## அரசுரிமை வருமானம்

இலங்கை அரசாங்கத்துக்காக புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் சேகரிக்கப்பட்ட அரசுரிமை வருமானம் பின்வரும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. அரசுரிமை வருமானத்தில் பொதுவான அதிகரிப்பு இதன்மூலம் காட்டப்படுகின்றது.



## சுரங்கங்களை பரிசீலிப்பதன் மூலம் சம்பாதித்த வருமானம்

பின்வரும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சுரங்க பரிசீலனைகள் மூலம் சம்பாதித்த வருமானம் துரிதமாக அதிகரித்ததுடன் இது நாட்டில் கனிம தைத்தொழில் துறையின் துரித வளர்ச்சியைக் காட்டுகின்றது.




## கனிமப் பொருட்களை பதிவு செய்யும் அலுவலகம்

2011இல் கனிம அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 8722 விண்ணப்பங்கள் புதிதாக கிடைத்தன.

| | |
|---|---|
| கற்குழிகள் | 3017 |
| மணல் | 4911 |
| களிமண் | 92 |
| பரல் கற்கள் | 355 |
| மண் | 04 |
| களிமண், மணல் | 26 |
| கெல்சைட் | 10 |
| மைக்கா | 45 |
| திரிலானை | 80 |
| சிலிகா மணல் | 10 |
| உருண்டை களிமண் | 17 |
| டொலமைட் | 36 |
| பீங்கான் களிமண் | 10 |
| பொஸ்பேற் | 01 |
| கருங்கல் | 03 |
| பெல்ஸ்பா | 11 |
| சுண்ணாம்புக்கல் | 01 |
| காரியம் | 04 |
| கல்சியம், டொலமைட் | 36 |
| திருவானை பரல்கற்கள் | 41 |
| திருவானை பீங்கான் ஃ களிமண் | 01 |
| கடல் மணல் | 06 |
| கனிம மணல் | 04 |
| தங்கம் | 01 |
| மாதிரி கடிதங்கள் | 60 |
| ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்கள் | 58 |

## ஒவ்வொரு வருடத்திலும் பலதரப்பட்ட கனிமப் பொருட்களுக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான விபரங்கள்












## பிராந்திய அலுவலகங்கள்

சுரங்கப் பணியகம் தற்போது கண்டி, மாத்தறை, குருநாகல், பதுளை, இரத்தினபுரி, அநுராதபுரம், கம்பளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இயங்கும் 13 பிரதேச அலுவலகங்களுடன் செயற்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட பிரதேசங்களில் சுரங்க அகழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ள சேவை வழங்குனர்களுக்கு சிறந்த சேவையை வழங்குதல் மற்றும் சட்டவிரோத சுரங்க அகழ்வுப் பணிகளை கட்டுப்படுத்தல் இந்த பிரதேச அலுவலகங்களின் பிரதான கடமைகளாகும்.

**பிராந்திய அலுவலகங்களில் பணி புரியும் பிராந்திய அகழ்வு பொறியியலாளர்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு**

| பிராந்திய அலுவலகம் | பிராந்திய பொறியியலாளர் |
|---|---|
| கண்டி,வில்கமுவ, மினிப்பே (உப அலுவலகங்கள்) | திரு. தம்மிக பிரசாத் |
| குருநாகல் | திரு.எஸ்.ஏ.ஐ.ஜே.ரொட்ரிகோ |
| மாத்தறை | திரு. யு.எச்.ரி. பிரியந்த |
| பதுளை | திரு. ரி.எம்.டப்ளியூ. பண்டார |
| அநுராதபுரம் | திரு. கே.ஏ.எஸ். தர்மசிறி |
| இரத்தினபுரி | திரு. ரி.எஸ். குமார |
| அம்பாறை | திரு.எச்.கே.சி.கே.டப்ளியூ. பண்டார |
| மொனராகலை | திரு. டப்ளியூ.ஜி.எஸ். கோகிலா |
| ஹம்பாந்தோட்டை | திரு. எல். அசேல பர்னாந்து |
| திருகோணமலை, கந்தளாய் (உப அலுவலகங்கள்) | திரு.கே.என்.டப்ளியூ.கே.விமலரத்ன |
| மட்டக்களப்பு | திரு. எம்.ஆர்.எம். பாரீஸ் |
| யாழ்ப்பாணம் | செல்வி லோகா கௌரி கருணாநந்தசிவம் |
| களுத்துறை | திரு. கே.வி. ஜகத் |

## அகழ்வு அனுமதிப் பத்திரங்களை வழங்குதலை பன்முகப்படுத்தல்

சுரங்க அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் பன்முகப்படுத்துவதற்கு பணியகம் தீர்மானித்துள்ளதுடன் ஆரம்ப நடவடிக்கையாக கட்டிட பொருட்களுக்காக தொழில்நுட்ப அனுமதிப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம் பிரதேச முகாமையாளர்களினாலும் முகாமைத்துவ சபையினாலும் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் பதவியணி உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

தொழில்நுட்ப அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் "சீ" விநியோகிக்க போதுமான பதவியணி வசதிகளைக் கொண்ட பிரதேச அலுவலகங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. தற்போது பதுளை, இரத்தினபுரி, மற்றும் களுத்துறை ஆகிய பிரதேச செயலகங்களினால் இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

## செயலமர்வுகள், கருத்தரங்குகள்

சுரங்க அகழ்வுப் பணிகள், மற்றும் குறிப்பிட்ட பிரதான தொழில்நுட்ப பிரச்சினைகளை திர்த்து கொள்வதற்காகவும் மற்றும் சுரங்க கனிம சட்டத்துக்கமைய பணியகத்துக்குரிய ஆட்சி அதிகாரம் தொடர்பாக அரச அமைப்புக்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுள்ளவர்களை அறிவூட்டுவதற்காக கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை சுரங்கப் பிரிவினால் நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளில் நடத்தப்பட்டது. இந்த செயலமர்வுகளின் அடிப்படை நோக்கம், சுரங்க மற்றும் கனிமச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பிரதேச செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்கள் மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகத்துடன் இருக்கும் தொடர்புகள் பலப்படுத்தப்பட்டன. சுரங்கப் பிரிவினால் நடத்தப்பட்ட செயலமர்வுகள் மற்றும் அறிவூட்டும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| செயலமர்வுஃஅறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் | திகதி | தொனிப்பொருள் |
|---|---|---|
| 1. உமா ஓயா கருத்திட்டம் தொடர்பான செயலமர்வு - நீர்ப்பாசனத் திணைக்களம் | 2011.02.25 | உமா ஓயா திட்டத்தில் புவிச்சரிதவியல் கனிமப் பிரிவு தொடர்புபடுதல் |
| 2. தன்கொட்டுவ பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட செயலமர்வு - பொலிஸ் திணைக்களம் | 2011.03.22 | அகழ்வு பணிகளில் குறிப்பிட்ட சட்டங்கள் |
| 3. இரத்தினபுரியில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.04.27 | வர்த்தகமற்ற, நோக்கங்களுக்காக மணல், மண், பரல் கற்கள் ஏற்றிச் செல்லும் அனுமதிப் பத்திரங்களை வழங்குவது தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல். |
| 4. ஹம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.05.03 | |
| 5. மொனராகலையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.05.10/ 2011.09.06 | |
| 6. கொழும்பு / கம்பஹாவில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.06.03 | |
| 7. மாத்தறையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.09.15 | |
| 8. பதுளையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.09.16 | |
| 9. களுத்துறையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.10.03 | |
| 10. குருநாகலில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.10.27 | |
| 11. ஹம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.11.06 | |
| 12. மத்திய சூழல் அதிகார சபையினால் நடத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 2011.04.23 | |
| 13. கௌரவ அமைச்சரின் கலந்து கொள்ளலுடன் பன்னலவில் நடைபெற்ற அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 2011.05.10 | அகழ்வு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் தொடர்பான சட்ட விதி முறைகளும் நடைமுறைப் பிரிவினைகளும் |
| 14. வரையறுக்கப்பட்ட சூழல் மன்ற நிறுவனத்துடன் பிரதான அலுவலகத்தில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.06.10 | மாஓயா கல்கொட ஆற்றங்கரையை பலப்படுத்தல் |
| 15. மன்னார் மாவட்டத்தில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 2011.08.13 | மன்னார் மாவட்டத்தில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் வழிநடத்தல். |
| 16. செங்கற்கள் ஓடுகள் மற்றும் திவுலப்பிட்டியவில் | 2011.08.20 | அகழ்வுப் பத்திரத்தை வழங்குவது தொடர்பான சட்டப் பிரச்சினைகள் |
| 17. வில்கடுவையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.09.08 | வில்கமுவ, பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அகழ்வு மகாவலி சங்கை ஆற்றல் |
| 18. மத்திய சூழல் அதிகார சபையில் நடத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சி | 2011.10.01 | சுரங்க, கனிப்பொருள் சட்டம் மற்றும் பொலிஸ் திணைக்கள கடமைப் பொறுப்பு |
| 19. மணல் அகழ்வு மேற்கொள்பவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 2010.11.15 | சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் |

## கல்வி நிகழ்ச்சித்திட்டம்

### தொழில்நுட்ப ரீதியாக கற்பாறைகளை வெடிக்க வைத்தல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

இலங்கையில் கற்பாறைகளை வெடிக்க வைக்கும் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப மற்றும் பரிசிலனை மட்டத்திலான ஊழியர்களுக்காக திட்டமிடப்பட்ட கற்பாறைகள் தொடர்பான முதலாவது மூன்று மாத சான்றிதழுக்கான பாடநெறி மத்திய சூழல் அதிகார சபையின் ஒத்துழைப்புடன் 2011 ஜுன் மாதம் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் நடத்தப்பட்டதுடன் இது நீண்டகாலமாக நிலவிய தேவையொன்றை நிவர்த்தி செய்தமையாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வருடாந்தம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன் இதன் மூலம் வெடிக்க வைப்பதன் மூலமான உற்பத்தி திறன் மற்றும் மேற்பார்வை பணிகள் மேம்படுத்தப்பட உள்ளன.

## சுரங்கப் பரிசீலனைக் குழு

பதிவு செய்வதற்காக பதிவு செய்யும் அலுவலகங்களுக்கு கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் சட்டவிரோத சுரங்க அகழ்வு தொடர்பாக பலதரப்பட்ட நபர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் மனுக்கள் தொடர்பாக 2011இல் அகழ்வு பொறியியலாளர்களினால் 7722 வேலைத்தள பரிசீலனைகள் இடம்பெற்றன. மக்கள் எதிர்ப்பு தெரிவித்த கற்குழிகள் தொடர்பாக பரிசீலனை ரீதியிலான வெடிவைத்து தகர்த்தல்கள் 130 இடம்பெற்றதுடன் அம்பாறை மக்கள், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களில் மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாகவும், கற்குழிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பாகவும் ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காகவும் தேவையான அறிவூட்டல்களை வழங்குவதற்காகவும் அதற்கான ஒழுங்குகள் குறிப்பிட்ட மாவட்ட செயலகங்களில் நடத்தப்பட்டன.

பலதரப்பட்ட அகழ்வு பணிகளுக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக பிரதேச முகாமையாளர்கள் மாவட்ட செயலாளர், குறிப்பிட்ட மாவட்டங்களின் சகல பிரதேச செயலாளர்கள், திணைக்களங்கள் உட்பட வேறு நிறுவனங்களில் இதனுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் வடமேல், சப்ரகமுவ மாகாணங்களில் மணல் அகழ்வுக்கான தகுந்த இடங்கள் மற்றும் மணலின் அளவினை அறிந்து கொள்வதற்காக மகாவலி மற்றும் களனி கங்கைகளில் மணல் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக அகழ்வு பொறியியலாளர்கள் தமது ஒத்துழைப்பினை வழங்கினார்கள். எவ்வாறாயினும் சட்டவிரோத அகழ்வுப் பணிகளை குறைப்பதற்காக சுரங்கப் பணியகத்தின் இத்தகைய முக்கியமான நடவடிக்கைகள் பல இடம்பெற்ற போதிலும் இன்றும் அதனை முற்றாக நிறுத்த முடியவில்லை என்று குறிப்பிட வேண்டும்.

சுரங்கப் பணியகம் தொடர்ச்சியாக முன்வைத்த வேண்டுகோளுக்கமைய விசேடமாக மணல் அகழ்வு முன்னெடுக்கப்படும் பிரதேசங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளை சோதனைப்படுவதற்காக 60 வெளிக்கள அதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டது.

நிரந்தர வழிமுறையாக மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட இடத்திலான சோதனையிடுதல்களுக்கு மேலதிகமாக சட்டபடியான மற்றும் சட்ட விரோதமான அகழ்வுப் பணிகள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் நடத்தப்படும் கட்டங்கள் பலதரப்பட்ட சூழல் அமைப்புக்களுடன் நடத்தப்படும் சுரங்க தொழில் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் விபரங்களைப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

- 2011இல் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில் கொரம்தொட்ட பிரதேசத்தில் மாத்தளைப் பிரிதேசத்தில் சுரங்கத் தொழில் தொடர்பாக ஏற்பட்ட பாரிய இரண்டு விபத்துக்கள் தொடர்பாக சுரங்கப் பணியகத்துக்கு அறியக்கிடைத்தது.
- ஆரம்ப சூழல் தொடர்பான பரிசோதனைகள்

## சூழல் தாக்கங்களை மதிப்பிடும் கருத்திட்டம்

2011ஆம் ஆண்டில் விதிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்காக விசேடமாக கற்பாறைகளில் பல துளைகளையிட்டு வெடிப்புக்களை மேற்கொள்ளும் போது பின்வரும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப சூழல் சோதனை பிரிவிற்கான அறிக்கைகள் சுரங்கப் பிரிவினால் மதிப்பிடப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தயாரிக்கப்பட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டதன் பின்னர் சுரங்கப் பிரிவினால் மேற்கூறிய கருத்திட்டங்களுக்காக கைத்தொழில் துறை சுரங்க அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| உத்தேச கம்பெனியின் பெயர்கள் | உத்தேச கற்குழி வேலைத்தளம் |
|---|---|
| யு.வி.பி. ரவீந்திர | மில்லனிய, களுத்துறை |
| வரையறுக்கப்பட்ட சானகடக மெட்டல் தனியார் கம்பனி | பெலிஅத்த, தங்கல்ல |
| ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டம் | ஹம்பாந்தோட்டை |
| வரையறுக்கப்பட்ட ருஹுனு கம்பெனி இஞ்சினியரின் தனியார் கம்பனி | வெல்லரசக்குளம், வவுனியா |
| பிசினஸ் புரமேடர்ஸ் அன்ட் பார்ட்னர்ஸ் பிரைவேட் லிமிடட் | மமாதுவ, வவுனியா |
| பிரைம் லொஜிஸ்டிக் சேர்விஸ் இன்டர்நேஷனல் பிறைவேட் லிமிடட் | ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு |
| வரையறுக்கப்பட்ட மாகா இஞ்சினியரின் தனியார் நிறுவனம் | தனியமலை, முல்லைத்தீவு |
| வரையறுக்கப்பட்ட கே.பி. எபர்ட் சன்ஜே ஹோல்டிங் தனியார் கம்பனி | கொடலைக்கல்லு, முல்லைத்தீவு |
| டி.ஆர். ஜயசிங்ஹ | தெபுவான, களுத்துறை |
| வரையறுக்கப்பட்ட துடாவே பிரதர்ஸ் தனியார் நிறுவனம் | ரலபனவ, அநுராதபுரம் |
| மகா இன்ஹினீரிங் பிரைவேட் லிமிடட் | கெபிடிகொல்லாவ, அநுராதபுரம் |
| ஜயசிங்ஹ மெடல் கிரசர்ஸ் | பழுதெனிய, பொலன்னறுவை |
| இலங்கை விமானப்படை | உடவளவகந்த, நவகமுவ |
| எஸ்.டி.ஆர். சேனாதீர | துடுகல, களுத்துறை |
| வரையறுக்கப்பட்ட கொன்சல்டிங் இன்ஜினீரிங் கன்ட்ரக்டர் தனியார் நிறுவனம் | கந்தளாய் |

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தயாரிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய சுரங்கப் பிரிவின் மேற்கூறிய கருத்திட்டங்களுக்கான ஐ.எம்.எல். 'ஏ' தர அனுமதிப்பத்திரங்களை வழங்கப்படுகின்றன.

## பட்டப்பின் படிப்பு கற்கை மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

### பட்டப்பின்படிப்பு கல்வி

1. பி.டி. பிரசாத் (அகழ்வு பொறியியலாளர்) - புவிச்சரிதவியல் மற்றும் நீர் புவிச்சரிதவியல் தொடர்பான பட்டப்பின் படிப்பு (பேராதனைப் பல்கலைக்கழகம்)
2. கே.என்.டப்ளியூ.கே. விமலரத்ன (அகழ்வு பொறியியலாளர்) - புவிச்சரிதவியல் மற்றும் நீர் புவிச்சரிதவியல் தொடர்பான பட்டப் பின் படிப்பு (பேராதனைப் பல்கலைக்கழகம்)
3. எச்.கே.எம். குணசேகர (அகழ்வு பொறியியலாளர்) - மண் தடுப்பு வழிமுறைகள் மற்றும் அடித்தளம் இடல் தொடர்பான பொறியியல் சம்பந்தமான விஞ்ஞானப்பட்டம் (மொரட்டுவைப் பல்கலைக்கழகம்)
4. எச்.பி. சிறிவர்தன (அகழ்வு பொறியியலாளர்) - புவிச்சரிதவியல் தகவல் கட்டமைப்பு மற்றும் தொலை அதிர்வு தொடர்பான விஞ்ஞானப் பட்டம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)
5. திரு. டி. மயூரன் (அகழ்வு பொறியியலாளர்) - சூழல் பொறியியலாளர் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானிப் பட்டம் (மொரட்டுவைப் பல்கலைக் கழகம்)

## வேறு நடவடிக்கைகள்

பொதுவான வழிநடத்தல் பணிகளுக்கு மேலதிகமாக சுரங்க பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

1. நுவரெலியா - பதுளை வீதி நிர்மாணக் கருத்திட்டத்தில் கற்பாறைகளை வெடிவைத்து தகர்க்கும் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக சோதனையிடுவதற்கான விஜயமொன்று 2011 ஜனவரி மாதம் 02ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது.
2. பிரதேச செயலகம் தொடர்பான பணிகளை கலந்துரையாடுவதற்காக பிரதேச முகாமையாளர்களின் மாதாந்தக் கூட்டம் ஜனவரி மாதம் 07ஆந் திகதி தலைமை அலுவலகத்தில் நடத்தப்பட்டது.
3. புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அகழ்வு பொறியியலாளர்கள் மற்றும் உதவிச் செயலாளர்களுடன் அவர்களது பயிற்சிக்காக வெளிக்கள விஜமாக ஜனவரி மாதம் 08ஆந் திகதி அருவருக்காறுக்கான விஜயம் மேற்கொள்ளப்பட்டது.
4. சூழல் அமைச்சுடன் தொடர்பான சகல நிறுவனங்களினதும் 2011ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை தொடர்பாக கலந்துரையாடுவதற்கான செயலமர்வு ஜனவரி மாதம் 14ஆம் 15ஆம் திகதிகளில் இக்டாட் இறுவனத்தில் நடைபெற்றது.

5. சூழல் தாக்க மதிப்பீடு ஆரம்ப சூழல் ஆய்வு விதிமுறைகள் தொடாபான பிரச்சினைகளை ஆராய்வதற்காக மத்திய சூற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் வேறு பிரிதான உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் ஜனவரி மாதம் 31ஆந் திகதி பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது.

6. வர்த்தகமற்ற நோக்கங்களுக்காக மணல், களிமண், பரல்கற்கள் மற்றும் அவற்றை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களை பகிர்ந்தளித்தல், புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் அனுமதிப் பத்திரங்களை பகிர்ந்தளிக்கும் அதிகாரம் பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. 2011 பெப்ருவரி மாதம் 01ஆந் திகதி புத்தள தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வளவுக்கு விஜயம் செய்வதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளல்.

8. கம்பளை மாவட்டத்தில் மாலுயாவில் மணல் அகழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் செயலமர்வொன்றும் ஒழுங்கு செய்யப்படல்.

9. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உத்தேச தொழில்நுட்ப அகழ்வு அனுமதிப்பத்திரம் தொடர்பாக 'எ' பிரிவு கற்குழிகளை சோதனை செய்வதற்காக பெப்ருவரி மாதம் 15ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெளிக்கள விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

10. கம்பளை பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக கம்பளை மாவட்டத்துக்கு சூழல் பாதுகாப்பு அமைச்சருடன் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பெப்ருவரி மாதம் 14ஆந் திகதி நடத்தப்பட்டது.

11. கொழும்பு மாவட்டத்தில் கற்குழிகள் மற்றும் மணல் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அரசாங்க அதிபருடனான கலந்துரையாடலொன்று கொழும்பு மாவட்ட செயலகத்தில் மார்ச் மாதம் 14ஆந் திகதி நடைபெற்றது.

12. உத்தேச தொழில்நுட்ப அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் 'எ' பிரிவின் கீழ் கற்குழிகளை பரிசிலிப்பதற்காக கெக்கிராவை மற்றும் வவுனியா பிரதேசங்களுக்கு வெளிக்கள விஜயமொன்று மார்ச் மாதம் 20ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது.

13. வரையறுக்கப்பட்ட சூழல் மன்றத்தின் அனுமதியுடன் பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கான செயலமர்வு மார்ச் மாதம் 22ஆந் திகதி தன்கொட்டுவ பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

14. விசேடமாக வட மாகாணத்தில் காட்டுப்பிரதேசங்களில் அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்காக அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு குறிப்பிட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஏப்ரல் மாதம் 01ஆந் திகதி வன சீவராசிகள் திணைக்களத்தில் நடத்தப்பட்டது.

15. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாக கௌரவ அமைச்சருடன் கலந்ரையாடலொன்று ஏப்ரல் மாதம் 06ஆந் திகதி சூழல் அமைச்சில் நடைபெற்றது.

16. அம்பாறை மாவட்டத்தில் தெஹியத்த கண்டிய பிரதேசத்தில் திருனாவா கற்களை அகற்றுவதற்காக கைத்தொழில் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக மகாவலி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் ஏப்ரல் மாதம் 07ஆந் திகதி கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

17. உயர் நீதிமன்றத்தின் வழக்கு இல. ளுஊஏகுசு 81 தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக வரையறுக்கபடப்ட சூழல் மன்ற கம்பனியுடன் ஏப்ரல் மதம் 08ஆந் திகதி கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

18. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக சிலிடாவில் ஏப்ரல் மாதம் 20ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த புவிச்சரிதவியல் ஆய்வுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

19. கனிம மற்றும் சுரங்க சட்டம் மற்றும் பிரமாணங்களில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களை பூர்த்தி செய்வதற்காக மே மாதம் 09ஆந் திகதி சூழல் பாதுகாப்பு அமைச்சில் கூட்டமொன்று நடத்தப்பட்டது.

20. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் தற்போதைய நிலமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கூட்டமொன்று கௌரவ சூழல் அமைச்சருடன் மே மாதம் 11ஆந் திகதி நடைபெற்றது. இது புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தால் இடம்பெற்றது.

21. உலக சூழல் தின நிகழ்ச்சித்திட்டம் கௌரவ சூழல் அமைச்சரின் கலந்து கொள்ளலுடன் ரம்புக்கனை பினவல மத்திய மகாவித்தியாலயத்தில் ஜுன் மாதம் 05ஆந் திகதி நடைபெற்றது கௌரவ அமைச்சர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

22. அனுமதிப்பத்திரம் வழங்கல் நடவடிக்கைக்காக மிகவும் சரளமான வழிமுறையொன்றை தயாரிப்பதற்காக அது தொடர்பான கலந்துரையாடல் சூழல் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு தெம்மனவுடன் ஜுன் மாதம் 01ஆந் திகதி நடத்தப்பட்டது.

23. வெடிவைத்து தகர்ப்பதற்கான பாடநெறியில் ஈடுபடும் நபர்களுக்காக பயிற்சித் திட்டமொன்றை நடத்துவதற்காக ஜுன் மாதம் 11ஆந் திகதி கம்பளை மல்லான கற்குழிக்கான வெளிக்கள விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

24. சட்டவிரோத அகழ்வுப் பணிகள் தொடர்பாக கௌரவ அமைச்சருக்கு செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாக ஆராய்வதற்காக வடமேல் மாகாணத்தில் தும்மலாசூரிய மற்றும் கல்கமுவை பிரதேசங்களுக்கு ஜுன் மாதம் 02ஆந் திகதி வெளிக்கள பயணமொன்று மேற்கொள்ளப்பட்டது.

25. திரு. டி. ஜயசிங்கவினால் ஜுலை மாதம் 17ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை சூழல் மதிப்பீட்டு அறிக்கையை மதிப்பிடுவதற்காக களுத்துறை தெம்புவான பிரதேசத்துக்கு விஜயமொன்று

மேற்கொள்ளப்பட்டது.

26. மண்ணம்பிட்டிய பிரதேசத்தில் மணல் அகழ்தல் தொடர்பான சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை இனங்காணுவதற்காக பொலன்னறுவை மண்ணம்பிட்டிய பிரதேசத்துக்கு ஜூலை மாதம் 29ஆந் திகதி வெளிக்கள விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

27. சூழல் அமைச்சின் கீழ் நடைமுறையிலிருக்கும் சகல நிறுவனங்களின் கௌரவ சூழல் அமைச்சரின் கலந்து கொள்ளலுடன் ஜூலை மாதம் 30 மற்றும் 31ஆந் திகதிகளில் வரகாபொல நகரத்தில் மத்திய வருடாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டமொன்று நடத்தப்பட்டது.

28. வரையறுக்கப்பட்ட எபர்ட் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட கைத்தொழில் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் 'எ' பிரிவு அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் தொடர்பாகவும் மன்னார் மாவட்டத்தில் மணல் அகழ்வு தொடர்பாகவும் ஆராய்வதற்காக ஆகஸ்ட் மாதம் 06ஆந் திகதி முல்லைத்தீவு பிரதேசத்துக்கான விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

29. அகழ்வு மற்றும் நிர்மாணப் பணிகளுடன் தொடர்புபட்ட விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஆகஸ்ட் மாதம் 14 மற்றும் 15ஆந் திகதிகளில் யாழ்ப்பாணம் பிரதேச அலுவலகத்துக்கான விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

30. வரையறுக்கப்பட்ட மகா இன்ஜினீரிங் நிறுவனம் மற்றும் குமார பிரதர்ஸ் நிறுவனத்தினால் தொழில்நுட்ப அனுமதிப்பத்திரம் 'எ' பிரிவுக்கக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சோதிப்பதற்காக ஆகஸ்ட் மாதம் 21ஆந் திகதி மதவாச்சி - கெபிடிகொல்லாவ பிரதேசத்துக்கான விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

31. பொலன்னறுவை - மண்ணம்பிட்டிய பிரதேசத்தில் மணல் அகழும் பணிகள் மற்றும் மகாவலி ஆற்றின் கரைகளை பலப்படுத்தும் திட்டத்தின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக செப்டெம்பர் மாதம் 01ஆந் திகதி வெளிக்கள விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது.

32. கடுவளை ரனல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கல் அரைக்கும் இயந்திர தொழிற்சாலை தொடர்பாக விமானப் படையினரால் முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படை சூழல் மதிப்பீட்டு அறிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக செப்டெம்பர் மாதம் 07ஆந் திகதி சட்டமொன்று நடத்தப்பட்டது.

33. தேசத்துக்கு மகுடம் கண்காட்சி தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்காக செப்டெம்பர் மாதம் 17ஆந் திகதி தந்திரி மலை பிரதேசத்துக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

34. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் தொடர்பான நடவடிக்கைகளை கலந்துரையாடுவதற்காக செப்டெம்பர் மாதம் 13ஆந் திகதி பாராளுமன்றத்தில் அரச தொழில் முயற்சிகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

## நிதி மீளாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் கிரயம் பின்வருமாறு

| விபரம் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| மொத்த புரழ்வு (ரூபா.மில்லியன்) | 256 | 347 | 463 | 668 | 862 |




### புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் வருமான உருவாக்கல்

புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் வருமான உழைப்பு பின்வருமாறு 04 செயற்பாடுகள் ஊடாக நடைபெறுகின்றது.

1. இரத்தினக் கற்கள் மற்றும் எரிபொருள் வளங்கள் தவிர்ந்த நாட்டில் உள்ள கனிப்பொருள் வர்த்தக பண்டங்கள் தொடர்பாக சகல அகழ்வுப் பணிகளையும் மதிப்பிடல் (அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், சோதனையிடுதலுக்கான கட்டணங்கள் ஆக்க உரிமைகளாக தொகுத்துக் காட்டலாம்)
2. புவிச்சரிதவியல், புவி பௌதீக பரிசோதனைகள் துளையிடுதல் உட்பட சேவை வழங்குனர்களின் வேண்டுகோளுக்கமைய பலதரப்பட்ட கருத்திட்டங்களை மேற்கொள்ளலும் விஞ்ஞான கூட சேவைகளும் (கருத்திட்டங்கள் மற்றும் விஞ்ஞான கூட சேவைகளாக தொகுக்கப்பட்டுள்ளன)
3. புவிச்சரிதவியல் வரைபடங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் இனங்காணப்படும் வேறு தகவல்களை விற்பனை செய்தல்
4. ஏற்றுமதி மாதிரிகளை நிர்வகிப்பதற்காக (வெவ்வேறாக சுருக்கமாக காட்டப்பட்டுள்ளது)

ஓரளவு அரச நிறுவனமான புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகானது பிரதானமாக நாட்டுக்கு சேவைகளை வழங்கும் நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. திட்டமிடல், முகாமைத்துவம், பொதுவாக மக்களுக்கு நடுநிலைமையான தகவல்கள் வழங்குதல். புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் மூலம் நாட்டுக்கு புவிச்சரிதவியல் தகவல்களை வரைபடங்களை வழங்குவதன் மூலம் நாட்டுக்கு புவிச்சரிதவியல் ரீதியிலான அறிவினை வழங்குவது புவிச் சரிதவியல் சுரங்கப் பணியக சேவைக்குள் அடங்குகின்றது. அடுத்த முக்கியமான சேவையாக அகழ்வுப் பணிகள் தொடர்பான ஒட்டுமொத்த நிருவாகத்தைக் குறிப்பிடலாம். கனிமப் படிமங்களை நிலையாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இருப்பது முக்கியமாகும் என்பதினல் கனிம தொழில்துறை மீது மேற்கொள்ளப்படும் முதலீடுகள் சமூகத்தில் குறுகிய காலத்துக்குரியதாக இருக்கின்றது. இதன் மூலம் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்துக்கு தொடர்ச்சியான அல்லது நிலையான சேவை வழங்குனர்கள் ஏதேனும் விசேடமான கனிப்பொருள் சம்பந்தமாக இல்லையென்றே குறிப்பிடல் வேண்டும்.

## புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் ஆரம்ப கருமமாற்றும் நடவடிக்கைகள்

புவிச்சரிதவியல், சுரங்கப் பணியகத்தினால் ஆரம்ப கருமமாற்றும் பணிகள், புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வு ஆகிய இரண்டு பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்த ஒவ்வொரு பிரிவும் பிரதி பணிப்பாள ஒருவரின் கீழ் செயற்படுகின்றது. புவிச்சரிதவியல் வரைப்படங்களை தயாரித்தல் மற்றும் கனிப்பொருள் ஆய்வு பிரதானமாக புவிச்சரிதவியல் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் பணியகத்தின் மூலமான வழிநடத்தும் பணிகள் சுரங்கப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் தொழில்நுட்பவியல் பணிகளை மேற்கொள்வதற்காக உதவுவதற்கும் விசேடமாக குறிப்பிட்ட பிரதேசங்களில் அகழ்வு பணிகளை கட்டுப்படுத்துவதற்காக 13 பிரதேச அலவலகங்கள் உள்ளன. பொது முகாமையாளரின் கீழ் இயங்கும் நிர்வாக மற்றும் நிதிப் பிரிவு மற்றும் சட்டப்பிரிவினால் இரண்டு பிரதான துறைகளுக்கான ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் வருமானம் பிரதானமாக இரண்டு பிரிவுகளாக புவிச்சரிதவியல் பிரிவு மற்றும் சுரங்கப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் சேவை வழங்குனர்களின் பணத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வு கருத்திட்டங்கள், ஆய்வுகூட பணிகள், வெளியிடுகள் விற்பனை நூலக சேவைகள், ஏற்றுமதி மாதிரிகளை தயாரித்தல் என்பவற்றின் மூலம் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் வருமானத்தை சம்பாதிக்கின்றது என்பதுடன் அனுமதிப்ப த்திரங்களை வழங்குதல், அரச உரிமத்தை அறவிடல், பரிசீலனை ரீதியிலான வெடி வைத்து தகர்த்தல்கள், வெளிக்கள சோதனைகள் என்பவற்றின் மூலம் சுரங்கப் பிரிவு பணம் சம்பாதிக்கின்றது.

## பிரதான பிரிவுகளிலிருந்து கிடைக்கும் வருமனம்

| பிரதான பிரிவு | வருமான சம்பாத்திய வழி | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| புவிச்சரி-தவியல் பிரிவு | விஞ்ஞானகூட வருமானம்<br>கருத்திட்ட வருமானம்<br>வெளியீட்டு வருமானம்<br>மாதிரி ஏற்றுமதி | 36.9 | 45.4 | 36.5 |
| சுரங்கப் பிரிவு | அரச உரிமம்<br>அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்<br>பரிசோதனைக் கட்டணங்கள்<br>பரிசீலனை வெடி வைத்து தகர்த்தல் வருமானம்<br>அலுவலக கட்டணங்கள் அகழ்வு வருமானம் | 418.9 | 619 | 816 |




## சேவைப் பிரிவுகளூடாக

| விபரம் | 2009/10 | 2010/11 | 2011/12 |
|---|---|---|---|
| கூடிய வருமானம் பெறும் சேவைகள் மூலம் கிடைத்த வருமானம் (ரூபா. மில்லியன்) அரச உரிமம் | 463 | 668 | 862 |




## வர்த்தகத் துறைகள்

| விபரம் | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| பாரிய துறைகளிலிருந்து கிடைத்த வருமானம் (ரூபா. மில்லியன்) | சுரங்கப் பிரிவு 419 | சுரங்கப் பிரிவு 619 | சுரங்கப் பிரிவு 816 |

## வாடிக்கையாளர்களிடமிருந்து

| விபரம் | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| வழமையான வாடிக்கையாளர்கள் மூவரிடமிருந்து கிடைத்த வருமானம் (ரூபா. மில்லியன்) | 90 | 84 | 118 |




**2009 - பிரதான வாடிக்கையாளர்கள்**
வரையறுக்கப்பட்ட இலங்கை மினரல் சான்ட்ஸ் கம்பனி, மத்திய கலாச்சார நிதியம், ஆடீஜ தனியார் கம்பனி

**2010 - பிரதான வாடிக்கையாளர்கள்**
வரையறுக்கப்பட்ட இலங்கை மினரல் சான்ட்ஸ் கம்பனி, வரையறுக்கப்பட்ட சிலோன் குவாட்ஸ் தனியார் கம்பனி, மத்திய கலாச்சார நிதியம்

**2011 - பிரதான வாடிக்கையாளர்கள்**
வரையறுக்கப்பட்ட இலங்கை மினரல் சான்ட்ஸ் கம்பனி, வரையறுக்கப்பட்ட சிலோன் குவாட்ஸ் தனியார் கம்பனி, வரையறுக்கப்பட்ட போகல கரபைட் கம்பனி

## நிர்வாக மீளாய்வு

**புதிய ஆட்சேர்ப்பு** : புவிச்சரிதவியல் பணியகமானது தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக ஒத்துழைக்கும் பொருட்டு விசேடமாக குறிப்பிட்ட பிரதேசத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக கடந்த 3 வருடங்களில் 07 பிரதேச அலுவலகங்களை திறந்து இதன் மூலம் அதிகமான அகழ்வு பொறியியலாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் விசேடமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளை கண்காணிப்பதற்காக 60 வெளிக்கள உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

**சம்பள அதிகரிப்பு:** தமது கடமை இலக்குகளை எய்தும் போது அந்த ஒவ்வொரு ஊழியர்களினாலும் எடுத்துக்காட்டப்படும் முன்னேற்றத்தை சம்பள ஏற்றம் வழங்கப்படும்போது அந்த நடவடிக்கைகளை புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

**பதவி உயர்வுகள்:** அனைத்து தொழில்துறைகள் சம்பந்தமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தகுந்த தரப்பினருக்கு குறிப்பிட்ட பதவிகளில் பதவி உயர்வு வழங்குவதற்கும் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் நடைமுறைப்படுத்தும்.

**தரங்களுக்கான பதவி உயர்வு:** செயலாற்றுத்திறமை, தகவல்களை மேம்படுத்திக்கொள்ளல் செய்முறை ரீதியிலான அனுபவத்தை மேம்படுத்திக் கொள்ளல், தாபனத்தின் முன்னேற்றத்துக்காக ஊக்குவித்ததுடன் செயற்படல் அர்ப்பணிப்பு என்பவற்றின் அடிப்படையில் தமது தகவல்களுக்கான பதவி உயர்வுகளைப்பெற ஊழியர்களினால் முடியும்.

**செயலாற்றுத்திறனை மதிப்பீடு செய்தல், பரிசில்களை வழங்குதல் மற்றும் ஊழியர் ஊக்குவிப்பு:** புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் சகல நிரந்தர ஊழியர்களுக்கும் செயலாற்றுத்திறன் மற்றும் கடமைக்கு சமூகமளித்தல் என்பதனை அடிப்படையாகக்க கொண்டு விசேட வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டது. கடநற்த மூன்று வருடங்களில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக ஊழியர்களுக்கும் இந்த ஊக்கவிப்புத்திட்டம் மூலம் குறிப்பிடத்தக்களவு மேலதிக வருமானத்தைப்பெற முடிந்தது. வேறு விதத்தில் கூறினால் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் முன்னேற்றத்துக்காக ஊழியர்கள் பங்களிப்புக்கு அங்கீகாரம் வழங்குவது இதன் நோக்கமாகும்.

**ஊழியர் நலன்புரி மற்றும் சமூகப் பணிகள்:** வீடமைப்புக் கடன் மற்றும் வாகனக்கடன்கள் போன்ற மேலதிக பயன்களுக்கான உரிமை ஊழியர்களுக்கு உண்டு தமது அறிவினை வளர்த்துக் கொள்வதற்காக வாசிப்புக்காக ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் (இலக்கிய மாதத்தில்) புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவொன்று புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமது பிள்ளைகளுக்கு பாடசாலைப் பைகள் மற்றும் பாதணிகளை கொள்வனவு செய்வதற்காக புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் சகல ஊழியர்களுக்கும் புத்தாண்டு லீவு காலத்தில் பேக் மற்றும் பாதணிகள் உற்பத்தியாளர்களில் இருந்து கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ஊழியர்களின் பாடசாலை பிள்ளைகளுக்காக அந்தந்த பிள்ளைகள் கல்வி கற்கும் வகுப்புக்களின் தேவைகளுக்கமைய அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுதுகருவிகளும் வழங்கப்பட்டன.

**வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு:** புவிச்ரிதவியல் சுரங்கப் பணியகத்தின் ஒவ்வொரு பிரிவுக்குமான ஊழியர்களுள் சிறந்த ஊழியர்களுக்கான வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்றது.







**சாரதிகளுக்கான சீருடைகள்:** புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் சாரதிகளுக்கு அவர்கள் ஆற்றும் சேவைக்கு மதிப்பளிக்கும் வகையில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

**சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு:** சகல புவிச்சரிதவியல் திணைக்கள ஊழியர்களுக்கும் தாம் மருத்துவ செலவாக ஏற்க நேரிட்ட செலவில் 85மூ வரை (மருத்துவ ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள்) மருத்து செலவுகளை (வெளிவாரி சிகிச்சை உட்பட) மீண்டும் பெற்றுக்கொள்ள உரிமை உள்ளது. இதற்கான ஆவணங்களை (பற்றுச் சீட்டுக்கள்) அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

### மனிதவள அபிவிருத்திக்கான முதலீடு

| | 2010 ரூபா மில்லியன் | 2011 ரூபா மில்லியன் |
|---|---|---|
| வெளிநாட்டு | 1.7 | 0.6 |
| உள்ளூர் | 0.3 | 0.6 |
| மொத்தம் | 2.0 | 1.2 |

### 2011 செப்டெம்பர் மாதம் 31ஆந் திகதிக்கு பதவியணி ஒழுங்கமைப்பு

| பிரிவு | முகாமைத்துவம் | நிறைவேற்று | ஏனையவை |
|---|---|---|---|
| தேசிய | 05 | 94 | 163 |
| மொத்தம் | | | 262 |

### ஆண் பெண் அடிப்படையிலான பதவியணி 2011 செப்டெம்பர் மாதம் 31ஆந் திகதி

| ஊழியர்கள் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| முகாமை | 04 | 01 | 05 |
| நிறைவேற்று | 55 | 39 | 94 |
| ஏனையவை | 109 | 54 | 163 |
| 30 அகழ்வு இடங்களுக்குரியவை | 3,680,000 | வங்கிப் பிணைப் பொறுப்புகளின் செல்லுபடிக்காலம் முடிவடைவ தற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் பிராந்திய அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் குறித்த காணி பரிசோதிக்கப்பட்டிருக்க வில்லை. |
| 42 அகழ்வு இடங்களுக்குரியவை | 4,720,000 | வங்கிப் பிணைப் பொறுப்புகளின் செல்லுபடிக் காலம் முடிவடைவ தற்கு முன்னர் பணியகத்தினால் கையேற்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 03 அகழ்வு இடங்களுக்குரியவை | - | வங்கிப் பிணைப் பொறுப்பு களுக்குரிய களப் பரிசோதனை அவதானிப்புக்களின் பிரகாரம் இடைநிறுத்தப்பட்ட வங்கிப் பிணைப் பொறுப்பு தொடர்பாக பிணைப் பொறுப்பினை பணியகத்திற்கு கையேற்பதற்கோ அல்லது காணியை புனரமைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

## 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டில் ஒருகொடவத்த பிரதேசத்தில் காணியொன்றைக் கொள்வனவு செய்தல் மற்றும் அதில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக ரூபா 130,476,703 செலவிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் பத்தரமுல்லை பிரதேசத்தில் முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து மற்றுமொரு காணியினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 55,241,300 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதில் எவ்வித நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 1,200,000 தொகைக்கு பொறியியல் சேவைகளை வழங்குவதற்காக உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 600,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 381 ஆனதுடன் உள்ளபடியான பதவியணி 262 ஆகக் காணப்பட்டது. 119 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டது. அவ் வெற்றிடங்களை நிரப்பாது பணியகத்தினால் புவிச்சரிதவியலாளர்கள், எழுதுவினைஞர்கள், சுரங்கப் பொறியியலாளர்கள், சாரதிகள் மற்றும் வெளிக்கள கணிப்பீட்டு உதவியாளர்கள், கொள்வனவு உத்தியோகத்தர்கள் தொழிநுட்ப உதவியாளர்கள், அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக 12% பெறுமதி சேர் வரி சதவீதத்தை உள்ளடக்கி தொழிநுட்ப சேவைக் கம்பனியொன்றிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட சேவைகளுக்காக ரூபா 16,193,362 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பணியகத்தில் சேவை புரியும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையொன்றினை அங்கீகரித்து உரிய சம்பள அளவுகளில் வைப்பதற்கு முகாமை தவறியிருந்தது.

## 4.5 வாகனப் பயன்பாடு

பணியகத்திற்குச் சொந்தமாக 38 வாகனங்கள் கொண்ட வாகனத் தொகுதியொன்று காணப்படுவதுடன், பணியகத்திற்குச் சொந்தமான 28 சாரதிகளும் விஞ்ஞான ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தொழில்நுட்பச் சேவைகள் கம்பனியிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட 07 சாரதிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டில் வாகனத் திருத்த நடவடிக்கைகளுக்காக ரூபா 4,403,377 செலவிடப்பட்டிருந்தது. மேலும் தனிப்பட்ட நடவடிக்கைளுக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போது விபத்திற்குள்ளான கப் வண்டிற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1,743,169 ஆக இருந்ததுடன், ஓராண்டிற்கு மேலாக அது திருத்தம் செய்யப்படாமல் இருந்தது.

## 5. கணக்கு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

### 5.1 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்திட்டம் மற்றும் பாதீட்டு அறிக்கை, உள்ளவாறான செயலாற்றல், தரவுகளுடன் காலத்திற்கேற்ப ஒப்பிட்டு மீளாய்வு செய்யப்பட்ட விலகல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் நாளது வரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டம் வருடம் ஆரம்பமாவதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 – 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டம் 2012 யூன் 22 ஆம் திகதியே இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் ரூபா 319,900,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது எத்தகைய செலவினமும் மேற்கொள்ளப்படாதிருந்த 08 மூலதனச் செலவினங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) மூலதனச் செலவினத்தின் கீழ் 07 செலவின விடயங்களில் நிதிஏற்பாடுகளை மேற்கொள்ளாமல் ரூபா 2,141,736 தொகை செலவிடப்பட்டிருந்தன.

5.3 ஆண்டறிக்கைகையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

மேற்படி சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களிற்குள் வரைவு ஆண்டறிக்கை மும் மொழிகளிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 உள்ளகக் கணக்காய்வு

தலைமை உள்ளளக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரையும் மூன்று உதவி உத்தியோகத்தர்களையும் கொண்டிருக்க வேண்டிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

5.5 துணைக்கம்பனிகளில் முதலீடுகள்

பணியகம் ரூபா 4 மில்லியனுடன் கூடிய (60%பங்கு மூலதன உரித்துடன்) அதன் துணைக்கம்பனியாக ஜீஎஸ்எம்பி தொழிநுட்ப சேவை தனியார் கம்பனி (GSMB Technical services (pvt) Ltd) கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் 31 இல் பணியகத்தினால் முதலீட்டு மூலதனத்திற்காக பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம் ரூபா 2,000,000 ஆக இருந்தது.

5.6 திரட்டு நிதிக்கு பணத்தை செலவு வைத்தல்

| ஆண்டு | மொத்த வருமானம் | மொத்த மிகை/(பற்றாக்குறை) | திரட்டு நிதிக்கு பணத்தை செலவு வைக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2009 | 627,169,486 | 385,563,862 | செலவு வைக்கப்படவில்லை. |
| 2010 | 767,587,528 | 469,504,024 | 622,749,479 |
| 2011 | 961,801,534 | 618,549,416 | 1,000,000,000 |

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணியகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் முகாமைத்துவத்தின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்தல்
(ஈ) நிலையான சொத்துக்கள்
(உ) பொது முறைப்பாடுகளின் பரிசோதனை
(ஊ) ஊழியர் முகாமை
(எ) வாடகை அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்
(ஏ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஐ) வாகனப் பாவனை
(ஒ) மாகாண அலுவலகங்களின் நிர்வாகம்
(ஓ) அரசாங்க இறை முற்பணம்
(ஔ) அகழ்வுகளிற்கான அனுமதிப்பத்திர முற்பணம்
(க) பணியகத்தின் அனுமதிப்பத்திர விநியோகம்
(கா) போக்குவரத்து அனுமதிப்பத்திர விநியோகம்

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## கணக்காய்வுப் பதில்கள் - 2011

02.11.2012
எனது இல: GM/AD/9

கணக்காய்வு அதிபதி
கணக்காய்வு அதிபதி திணைக்களம்
இல. 306/72
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

புவிசச்ரிதவியல் சுரங்கப் பணியகத்தின் 2011 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த நிதி ஆண்டுக்கான நிதிக்கூற்று தொடர்பான 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(இ) பிரிவின்படி கணக்காய்வு அறிக்கை தொடர்பாக பணியகத்தின் விளக்கம்

2. நிதிக்கூற்று

2.2. நிதிக்கூற்று தொடர்பான அபிப்பிராயங்கள்

2.2.1. இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகளுடன் ஏற்புடையதாகாமை (S.L.A.S)

(அ) இவை விஞ்ஞான உபகரணங்கள் என்பதனால் இது சம்பந்தமாக பரீட்சயம் உள்ளவர்களை கண்டுபிடிப்பது பெரும் சிரமமாக உள்ளது. எவ்வாறாயினும், தேவையான தகவல்களை வழங்குமாறு மொறட்டுவை பல்கலைக்கழகத்துக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை கணக்கீட்டுக் கொள்கை 36 ஏற்புடையதான விடயங்கள்

கணக்காய்வாளர் அதிபதி அவர்களினால் காட்டப்பட்டுள்ள இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருப்பதுடன் இந்த விடயங்களை சீர்செய்ய எதிர்வரும் நாட்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடன் மீதியுடன் தொடர்பான அறவிட முடியாக்கடன்களுக்கான ஒதுக்கங்களை செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

(ை) கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு வாகனங்களின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்காக குறிப்பிட்ட வாகனங்கள் இருக்குமிடத்தை தேடிக்கண்டு பிடிப்பதற்காக உபகரண கட்டமைப்பொன்றை கொள்வனவு செய்வதற்கு குறிப்பிட்ட பணத்தை வழங்க வேண்டியுள்ளது. இந்த விடயங்களை செம்மையாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ை) குருநாகல் பிராந்திய அலுவலகத்துக்கு குத்தகைக் கட்டணமாக செலுத்தப்பட்ட முற்பணம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் முன்கூடிட்டியே செலுத்தல் செலவாக பதியப்படவில்லை. இந்த தவணை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3. கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

கணக்காய்வு அதிபதி அவர்களினால் காட்டப்பட்டுள்ளவாறு 2011.12.31ஆந் திகதி முடிவடைந்த நிதி ஆண்டுக்கான நிதி வெளியீடுகளில் காட்டப்பட்டுள்ள வருமான மற்றும் அரச உரிமம் முற்பணக் கணக்கு மற்றும் அகழ்வுப் பிரிவினால் தயார் செய்யப்பட்ட மாதாந்த சுருக்க அறிக்கையில் மீதிகளை கணக்கிணக்கம் செய்யும்போது ரூபா. 11இ315இ813 கான தொகையையும் ரூபா. 15,533,678 கான தொகையையும் மாத்திரமே மாற்றமடைகின்றது. அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

2011ஆம் ஆண்டுக்கான அரச உரிமம் - மாதாந்த சுருக்க அறிக்கைகளை தயார் செய்யும்போது பிரதேச செயலகங்களிலிரந்து வருமானமாக கிடைத்த ரூபா. 9,000,46.28 கான பணத்தொகை அகழ்வுப் பிரிவினால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதனால் அகழ்வுப் பிரிவின் அறிக்கையில் வருமான சபைக்கு மீதி நிதி அறிக்கையில் அரச உரிம வருமான கணக்கின் மீதி நிதிக்கூற்றுக்களில் அரச உரிம வருமான கணக்கின் மீதிகளையும் விட குறைவாகும். இந்த விடயத்தை கணக்குப் பிரிவின் கவனத்துக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க முடியும்.

அரச உரிமம் முற்பணம் - தொகை 2,941,426.00 ஆகும். இது தொடாபாக ஆராய்ந்து திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் - கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 24,400 ரூபாவுக்கான நிலுவை காணப்படுவதுடன் இதற்கான காரணம் கணினிமயப்படுத்தும்போது ஏற்பட்ட தவறாகும். கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரம் பீ கணக்கு 19520 ரூபாவுக்கான வேறுபாட்டை காட்டுவதுடன் இதற்கான காரணம் 9760 ரூபா படியான இரண்டு பட்டியல்கள் கைத்தொழில் அகழ்வுப்பத்திரம் பி. முற்பண் கணக்கிலிருந்து வரவு வைக்கப்படவிருந்த போதிலும் அது இந்தக் கணக்கின் ஊடாக செலவு வைக்கப்பட்டிருந்தது இதனால் கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரக் கணக்கு 19520 னால் குறைந்துள்ளது. (பட்டியல் இல. 57412 28/10/2011 மற்றும் 57461 28/10/2011)

கைத்தொழில் அனுமதிப் பத்திரங்கள் சி பிரிவின் கணக்கு 4880 ரூபாவுக்கான குறைவினைக் காட்டுகின்றது. இதற்கு 2011 ஒக்டேபர் மாதம் விலைப்பட்டியல்களை உள்ளடக்கும்போது கைத்தொழில் அகழ்வு சி முற்பணக் கணக்கில் வரவு வைக்க வேண்டியிருந்த 4880 ரூபாவுக்கான விலைப்பட்டியல் கைத்தொழில் அகழ்வு அனுமதிப் பத்திர வருமானக் கணக்கின் ஊடாக வரவு வைக்கப்பட்டமை இதற்கு காரணமாகும். இதனால் கைத்தொழில் அனுமதிப்பத்திரம் சி வருமானக் கணக்கு 4880 ரூபா குறைவாக காட்டப்பட்டுள்ளது. (பட்டியல் இல. 57414 திகதி 28/10/2011). இந்த தவறை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஐகைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரம் பீ வருமானக் கணக்கு : | 19520.00 |
| கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரம் சீ வருமானக் கணக்கு : | 4880.00 |
| மொத்த வித்தியாசம் : | 24400.00 |

வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் - வர்த்தக அனுமதிப் பத்திரம் சீ மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரம் சீ தொடர்பாக வர்த்தக அனுமதிப்பத்திரத்தின் மீதியின் மாற்றங்களை காணக்கூடியதாக இருந்தது. வர்த்தக அனுமதிப்பத்திரம் சீ யில் வருமானத்தில் மீதி மாற்றமடைவதற்கான தெளிவாக்கம் 03அ அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 1400 ரூபாவுக்கான பற்றுச் சீட்டொன்று தவறுதலாக சி. வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன்படி நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படக்கூடிய வித்தியாசம் 1400 ரூபா மாத்திரமே. இது வர்த்தக அனுமதிப்பத்திர வருமானம் சி. கணக்கில் வரவு வைக்கப்பட்டு அரச உரிமம் - மணல் வருமானக் கணக்கில் செலவு வைக்கப்படல் வேண்டும். ஏனைய அகழ்வுப் பிரிவினால் ஏற்பட்ட தவறுதல்களாகும். இந்த விடயத்தை அகழ்வுப் பிரிவின் கவனத்துக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் - அகழ்வுப் பிரிவினால் தயார் செய்யப்பட்ட மாதாந்த சுருக்க அறிக்கையில் மார்ச் மாதத்துக்கான போக்குவரத்து அனுமதிப்பத்திரக் கட்டணமாக 5400.00 ரூபாவுக்கான தொகை தவறுதலாக கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. இதன்படி மாதாந்த சுருக்க அறிக்கைகளில் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களாக குறிப்பிட வெண்டிய சரியான பணத்தொகை ரூபா 33,663,510 ஆகும். மேலும் பிரதேச செயலகங்களிலிருந்து வருமானமாக கிடைக்கும் ரூபா. 2,287,665 கான தொகை அகழ்வுப் பிரிவின் மாதாந்த சுருக்க அறிக்கைகளை தயார் செய்யும்போது கவனத்தில் கொள்ளப்படவில்லை. இதன்படி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதி சரியானதாகும்.

பரிசோதனைக் கட்டணங்கள் - அகழ்வுப் பிரிவின் சோதனையிடல் கட்டணங்களாக குறிப்பிடப்படும் கட்டணங்கள் வெளிக்கள பரிசோதனைகளுக்கான கட்டணங்கள் மற்றும் விசேட வெளிக்கள பரிசோதனைகளுக்கான கட்டணங்கள் என இரண்டு வகைப்படும். எவ்வாறாயினும் இந்த இரண்டுவகைக் கட்டணங்களும் கணக்குப் பிரிவின் நிதிக்கூற்றுக்களில் வெவ்வேறான இரண்டு கணக்குகளாகவே காட்டப்பட்டுள்ளன.

உதாரணம்: கணக்கு குறியீடுகள்

30301 – வெளிக்கள சோதனையிடுவதற்கான கட்டணக்கணக்கு
30302 – விசேட வெளிக்கள சோதனையிடுவதற்கான கட்டணக் கணக்கு

இதன்படி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் முழுமையான வெளிக்கள சோதனையிடுதல் கட்டணங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| 30301 – வெளிக்கள சோதனையிடுவதற்கான கட்டணம் | 126769543.19 |
| 30302 – வெளிகக்ள விசேட சோதனையிடுவதற்கான கட்டணம | 1384200.00 |
| | 128153743.19 |

அகழ்வு நானாவித வருமானங்கள் - அகழ்வுகளின் மூலம் கிடைக்கும் வேறு வருமானங்கள் மற்றும் பழைய அனுமதிப்பத்திரங்கள் இல்லாமையினால் அறவிடப்பட்ட தொண்டர் பணம் வருமான அகழ்வு நானாவித வருமானமாக அகழ்வு பிரிவின் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்குப் பிரிவின் நிதிக் கூற்றுக்களில் இந்த இரண்டு வருமானமும் வெவ்வேறாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

உதாரணம் கணக்கு

303310 – வேறு அகழ்வு வருமானக் கணக்குகள்

30314 – பழைய அனுமதிப்பத்திரங்கள் இண்மையினால் அறவிடப்பட்ட தண்ட வருமானம்

இதன்படி நிதி அறிக்கைகளில் காட்டப்படும் மொத்த அகழ்வு நானாவித வருமானங்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 30310 – வேறு அகழ்வு அனுமதிப்பத்திரக் கணக்கு | 13350706.91 |
| 30314 – பழைய அனுமதிப்பத்திரங்கள் இண்மையினால் அறவிடப்பட்ட | 2863577.14 |
| | 16214284.35 |

ரூபா. 154இ549.38 கான தொகை சம்பந்தமாக ஆராய்வதற்காக

பரிசீலனை ரதியிலான வெடிவைத்து தகர்த்தல் வருமானம்

இந்த வருமானம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் மீதி தொடர்பாக அகழ்வுப் பிரிவின் மாதாந்த வருமானத்தில் காட்டப்பட்டுள்ள மீதிகளையும் விட ரூபா. 30825 ரூபாவினால் குறைவாகும் இதனை நிதிக் கூற்றுக்களில் திருத்த வேண்டும்.

2.2.4. கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) இதுவரை அறவிட முடியாதுள்ள கடன்பட்டோர் மீதி தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாற சட்டப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தமக்கு கிடைக்க வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்ட கடன்கொடுத்தோர் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாவிட்டால் அவர்களது பணம் அரச கணக்கிற்கு மாற்றப்படும்.

(ஆ) அகழ்வு அனுமதிப்பத்திரம் முற்பணக் கணக்கிற்குரிய சுருக்கம் இத்துடன் சமர்ப்பிக்கப்படும் என்பதுடன் குறிப்பிட்ட அட்டவணையை தயாரித்தல் 1994ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளபப்ட வேண்டிய நடவடிக்கைகளாகவும் இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடாபாக பணிப்பாளர் சபை தீர்மானத்தை எடுக்கும்.

2.2.5. கணக்காய்வின் போதான சான்றிதழ் இன்மை

மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அட்டவணைகள் கணக்காய்வு மீளாய்வுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய ஆவணங்கள் எதிர்காலத்தில் ஒப்படைக்கப்படும்.

2.2.6. சட்டதிட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய ஒழுகாமை

(அ) நிதிப் பிரமாணக்கோவை

(I) நிதிப் பிரமாணக் கோவை இல. 104(4)

மீளாய்வு ஆண்டினுள் பணியகத்தின் வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்வுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரதிநிதகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(II) நிதிப் பிரமாணக் கோவை இல. 135

கணக்காய்வு அதிபதி அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் குருனாகல் பிரதேச அலுவலகத்துடன் தொடர்புபட்டதாகும். கடமைகளை அரியவாறு பகிரும் வகையில் நிதி நிர்வாகம் தொடர்பாக சகல உத்தியோகபூர்வமான கடமைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சகல பிராந்திய அலுவலகங்களுக்கும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(III) நிதிப் பிரமாணக் கோவை இல. 144

கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு செயற்பட சகல பிரதேச அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது

(IV) நிதிப் பிரமாணக் கோவை இல. 177

தாமதமில்லாமல் பணத்தை வங்கியில் போடுமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(V நிதிப் பிரமாணக் கோவை இல. 454(1)

பொருட்பட்டியலை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(VI) நிதிப் பிரமாணக் கோவை இல. 763

இது தொடர்பாக ஆராய்ந்து இதன் உள்ளக நிர்வாகத்தை செம்மைப்படுத்தவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(VII) நிதிப் பிரமாணக் கோவை இல. 1647(அ)

வாகனங்கள் தொடர்பாக பூரண ஆய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(VIII) அரச தொழில் முயற்சிகள் தொடர்பான இரண்டாம் கட்டம்

1994 ஜுன் மாதம் 14ஆந் திகதி 95ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கை

பொது திறைசேரியின் அனுமதிக்கிணங்க பணியகத்தினால் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது.

(IX) புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் வெளியிடப்பட்ட 2009 ஜனவரி மாதம் 08ஆந் திகதிய 56.05.2008 ஆம் இலக்க சுற்றறிக்கை (காலம் கடந்த போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் பணியகத்தினால் பொறுப்பெறகப்பட்டன.)

பணியகத்தின் களஞ்சியமொன்று பன்னலையில் அமைந்துள்ளது. தண்டப்பணம் அறவிடப்படுவது தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய நடவடிக்கை எடுக்கப்படும்.

(X) 2003 ஒக்டோபர் மாதம் 28ஆந் திகதி 17ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை தொடர்பாக தேடிப்பார்த்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.7. கருத்து முறைப்பாடுகளை தோற்றுவித்த கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்கவிப்பு கொடுப்பனவு செலுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் அவர்களுக்கு கௌரவக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. கௌரவ கொடுப்பனவாக செலுத்தப்பட்ட தொகை தவறுதலாக ஊக்குவிப்பு கொடுப்பனவாக பதியப்பட்டுள்ளது. மேற்கூறிய கொடுப்பனவை வேறு கணக்கொன்றின் மூலம் குறைத்தல் வேண்டும்.

3. நிதி மீளாய்வு

3.1. நிதி பெறுபேறுகள்

அரச உரிமத்துக்கான செலுத்தலை அறவிட்டுக்கொள்ள பணியகத்தினால் மீளாய்வு ஆண்டினுள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் அத்துறையில் வருமானம் அதிகரித்துள்ளது.

மீளாய்வு ஆண்டினுள் பதவி அணியும் அதிகரித்ததனால் நிர்வாகச் செலவும் அதிகரித்துள்ளது.

3.2. பகுப்பாய்வு ரீதியிலான நிதி முகாமைத்துவம்

(அ) வருமான பகுப்பாய்வு
பிரதேச செயலாளனர்களின் பணிகளை முறைப்படுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடிந்தது.

3.3. செயற்படு மூலதனத்தை முகாமைத்துவம் செய்தல்

பணியகத்தின் கூடிய தொகையை அரச முதலீடுகளுக்காக பயன்படுத்தலாம் என்பதனால் அந்த பணம் தகுந்த துறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

4. கருமமாற்றல் மீளாய்வு

4.1. செயல்நிறைவேற்றுகை

(அ) (ஆ) கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பணியகம் தனது கவனத்தை செலுத்தியுள்ளதுடன் குறிப்பிட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4.2. முகாமைத்துவ செயலாற்றுத் திறமையின்மை

(அ) பணியகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் உரிய செயற்பாட்டினை பேணுவதற்காக தேவையான பதவியணி பணியகத்தின் ஊழியர் எண்ணிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு சம்பள ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்காக அந்த திட்டம் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

(ஆ) இலத்திரனியல் அரக கொள்கையை நடைமுறைப்படுத்தல்
SP/SB/03/10 சுற்றறிக்கையின்படி இலத்திரனியல் அரச கொள்கையை நடைமுறைப்படுவதற்காக பணியகம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதனை குறுகிய காலத்தில் பூர்த்தி செய்ய முடியாமையினால் இதனை பூரணப்படுத்துவதற்கு குறிப்பிட்டளவு காலம் தேவையென பணியகம் கருதுகின்றது. இது தொடர்பாக பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

- குறிப்பிட்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அது தொடாபான கட்டமைப்பு ரீதியிலான கற்கையை மேற்கொள்ள தகைமை பெற்றவர்களை தெரிவு செய்வதற்கான பத்திரிகை அறிவித்தலொன்றை பிரசுரித்தல்.
- தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிறுவனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரிதிநிதிகள் இணைந்து குறிப்பிட்ட தகவல்களை அனுப்பிவைத்த நிறுவனங்களிலிருந்து நான்கு நிறுவனங்களை சிபாரிசு செய்தல்.
- மேற்கூறிய 4 நிறுவனங்களிலிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.
- தகவல் தொழில்நுட்ப நிறுவனம், சுற்றாடல் அமைச்சு மற்றும் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினால் மேற்கூறிய கேள்விப் பத்திரங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் சில சிலசுற்று வட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- குழுவினால் மிகவும் தகுந்த நிறுவனத்தை தெரிவுசெய்தல்
- தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் இந்த செயற்பாடு தொடர்பாக கற்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் (பிரைஸ் வோட்டர் கூப்பர் - PWC) இந்த சந்தர்ப்பத்தில் மேற்கூறிய நிறுவனம் பணியகத்தின் ஒவ்வொரு பிரிவுகளுடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது. பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.
- பிரைஸ் வோட்டர் கூப்பரினால் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்ட துறை அறிக்கைகள் பணியகத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டன.

மேற்கூறிய அறிக்கை பணியகத்தினால் எதிர்வரும் நாட்களில் நடைபெற உள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அது அனுமதிக்கப்பட்டதும் மேற்கூறிய விடயத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மென்பொருள் வடிவமைப்பாளர் ஒருவரை தெரிவுசெய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளன.

(இ) மக்கள் முறைப்பாடுகளை ஆராய்தல்

சுட்டிக்காட்டப்பட்ட விடயம் தொடர்பாக பணியகத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஈ)(உ) மேற்கூறிய விடயம் தொடர்பாக கணக்காய்வு பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்க குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

4.3. வலுவிழந்த மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

(அ)(ஆ) பணியகத்தினால் தவறு தலைமை அலுவலகத்தை நிறுவுவதற்காக ஒருகொடவத்தையில் உள்ள காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் இந்த பிரதேசம் வறு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக பிரேரிக்கப்பட்டிருந்ததினால் இந்தக் காணியில் எமது தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி சபையின் அனுமதியைப்பெற்றுக்கொள்ள முடியவில்லை. எவ்வாறெனினும் இது தொடர்பாக எம்மால் மேலும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்கப்பட்டுள்ளதுடன் அவர்களது தீர்மானம் கிடைத்தன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2010இல் தமது பிரதான அலவலகத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியொன்று பணியகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இச்சந்தர்ப்பத்தில் அந்தக் காணிக்குரிய சட்ட உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க பணியகத்துக்கு நேர்ந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இது தொடர்பாக தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளன.

4.4. ஆளணி நிர்வாகம்

(அ) தற்போது வெற்றிடங்கள் இல்லாத பதவிகளுக்காக (உதாரணம்: சாரதி, எழுதுநர்) மற்றும் குறிப்பிட்ட வருடத்தில் வெற்றிடங்களை நிரப்பவிருந்த பதவிகளுக்காக (உதாரணம்: வெளிக்கள உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்) பணியகத்தினால் அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டன.

(ஆ) இது தொடர்பாக குறிப்பிட்ட ஆவணங்களின் பிரதிகள் எதிர்வரும் நாட்களில் சமர்ப்பிக்கப்படும்.

4.5. வாகன குறை பயன்பாடு

கணக்காய்வு அறிக்கையின்படி மீளாய்வு ஆண்டினுள் புதுப்பித்தலுக்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூபா. 4,403,377.00 ஆகும். சாரதிகளுக்கு சீருடைகளை வழங்குவதற்காக செலவிடப்பட்ட ரூபா. 299,175.34 கான தொகையும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் வாகனப் புதுப்பித்தல்களுக்கான செலவாக காட்டப்பட்டுள்ள தொகையிலிருந்து அந்த தொகையை குறைத்தல் வேண்டும். இதன்படி வாகனங்களை புதுப்பித்தல் மற்றும் ஏனைய புதுப்பித்தல்களுக்காக செலவிடப்பட்ட உண்மையான தொகை ரூபா. 4,104,202.03 ஆகும்.

PE-9000 இலக்கம் கொண்ட கெம் வாகனத்துக்கு ஏற்பட்ட விபத்து காரணமாக அந்த வாகனத்தின் முழுமையான செசி மீண்டும் ஜப்பானிலிரந்து கொண்டுவரப்பட உள்ளது. இதன்படி டொயோட்டா இலங்கை கம்பனிக்கு இந்த வாகனம் திருத்தப் பணிகளுக்காக வழங்கப்பட்டு ஒருவருட காலம் கடந்துள்ளதுடன் புதுப்பித்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தற்போது அந்த வாகனம் அம்பாந்தோட்டை பிரதேச அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாகனங்களுள் PE-8999, PE-8997 மற்றும் PE-7878 ஆகிய இலக்க வாகனங்களின் புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. 7425ஆம் இலக்க வாகனத்தின் புதுப்பித்தல் பணிகள் இன்றும் முடியவில்லை.

பணியகத்தின் கடமைகளுக்கான பயணங்கள் அதிகரித்துள்ளதனால் சிறு விபத்துக்களின்போது வாகன திருத்தங்களை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட உள்ளதாக முடிவெடுத்திடக்கூடாது.

5. கணக்கீடுகளில் நல்லாட்சி

5.1. தாபனத்திட்டம்

2012-2015ஆம் காலகட்டுத்துக்கான தாபனத்திட்டத்துக்கு 2012.06.22ஆந் திகதி நடத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது. அதனை இத்துடன் கணக்காய்வு மீளாய்வுக்காக சமர்ப்பிக்கின்றோம்.

5.2. வரவு செலவுக் கட்டுப்பாடு

| | ரூ.மில்லியன் |
|---|---|
| பிரதான அலவலக நிர்மாணம் (முதற்கட்டம்) | 270 |
| பிரதேச அலுவலக நிர்மாணம் (கம்பஹ) | 25 |
| பிரதேச அலுவலகங்களுக்கான காணி கொள்வனவு | 5 |
| துளையிடும் உபகரணங்கள் | 1 |
| நுசீ கட்டமைப்பினை விருத்தி செய்தல் | 10 |
| வன்பொருட்களை விருத்தி செய்தல் | 5.5 |
| மென்பொருட்களை விருத்தி செய்தல் | 3.4 |
| | 319.9 |

பிரதான அலவலகத்தை நிர்மாணிப்பதற்காக 270 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. காணியை கையளித்தல் இன்னும் முடியவில்லை என்பதனால் கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பான அடிப்படை பணிகள் இன்னும் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. யக்கல பிரதேச அலவலகத்துக்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பணிகள் ஏற்கனவே ஆரம்பிகக்ப்பட்டுள்ளன. இதுவரை கருத்திட்டத்துக்காக 4.4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் மீதிப் பணம் கருத்திட்டத்தை பூர்த்தி செய்ததும் வழங்கப்படும்.

பிரதேச அலவலகங்களுக்கு கணினிகளை கொள்வனவு செய்வதற்காக பணியகத்தினால் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டு பத்திரிகை அறிவித்தல்களும் செய்யப்பட்டுள்ளதுடன் தகுந்த விலைகள் இன்னும் கிடைக்கவில்லை. பல்வேறுபட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைகள் கோரப்பட்ட போதிலும் இன்னும் தகுந்த வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை.

ERP கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. விடயங்களை ஆராய்தல் மற்றும் செயலாற்றுத் திறமைகள் தொடர்பாகவும் தகுந்த நிறுவனங்களை தெரிவு செய்வது சம்பந்தமாகவும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

5.3. வருடாந்த அறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுகக்ப்பட்டன. 2010ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையுடன் தொடர்புடைய விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

6. கட்டமைப்பும் கட்டுப்பாடும்

கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ளவாறு கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் முன்னேற்றம் காண்பதற்கான விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுளள்ன.

கலாநிதி. என்.ஜி. விஜயாநந்த

தலைவர்

புவிசச்ரிதவியல் சுரங்கப் பணியகம்

பிரதிகள் - 01. திரு. G.S.S.G. பெரேரா, கணக்காய்வு அத்தியட்சகர்

02. செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு

03. செயலாளர், சுற்றாடல் அமைச்சு

## புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் அகழ்வுப் பணியகத்தின் சமூகப் பொறுப்புக்கள்

நாட்டில் கனிப்பொருள் வளங்களை இனங்காணுதல் மற்றும் மேம்படுத்தலுக்கான பணிகளை மேற்கொள்ளும் பிரதான அரச நிறுவனமான மற்றும் புவிச்சரிதவியல் அகழ்வு தொடாபான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமான புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் அனைவருக்கும் தேவையான தகவல்களை பக்கச்சார்பற்ற வகையில் வழங்கி வருகின்றது. அகழ்வு மற்றும் அது தொடர்பான பணிகள் மூலம் இயற்கைக்கும் சமூக சூழலுக்கம் பாதகமான நிலைமைகளை ஏற்படுத்துகின்றது. நிர்வாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலம் இந்த பாதிப்புக்களை குறைப்பதற்கு புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. காணிகள் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பொலிசார் பொன்ற ஏனைய துறையினரின் பரவலான கலந்து கொள்ளலுடன் அரச உத்தியோகத்தர்கள் அகழ்வாளர்கள் மற்றும் சமூகத்தினருக்கு விளக்கமளிக்கும் நடவடிக்கைகள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை நடத்துவதன் மூலம் இந்த விடயம் பலமடையச் செய்யப்படுகின்றது. சமூகப் பொறுப்பு தொடாபான எமது பொறுப்பு பின்வருமாறு:

- அகழ்வு மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மறுசீரமைத்தல்
- சூழலை வழமை நிலைக்கு கொண்டுவருதல் தொடர்பான கற்கையும் அதற்கான செயற்பாடுகளும்
- அறிவூட்டல் கருத்தரங்கு / கண்காட்சிகள / கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள / அறிவூட்டல் சுவரொட்டிகள்
- நில ஆபத்து போன்ற சந்தர்ப்பங்களில் அதற்கான தீர்வுகளில் நேரடியாக தொடர்புபடுதல்
- வேறு

  அ. வீடொன்றை நிர்மாணித்தல்
  ஆ. பாடசாலைகள் கட்டடமொன்றை நிர்மாணித்தல்
  இ. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் - நலன்புரிச் சங்கத்தினூடாக
  ஈ. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் - பௌத்த சங்கத்தினூடாக

## சுரங்க அகழ்வு காரணமாக சேதமடைந்த பகுதிகளை புனரமைத்தல்

### (அ) மா ஓயா புனரமைப்புத்திட்டம்

கேகாலையில் ஆரம்பித்து வழிந்தோடும் மா ஓயா கம்பஹா மற்றும் அம்பேபுஸ்ஸ பிரதேசத்தின் ஊடாக கொச்சிக்கடை பிரதேசத்தில் கடலுடன் சங்கமமாகின்றது. மேல் மாகாணத்துக்கு பிரதானமாக இதன்மூலமே மணல் வழங்கப்படுகின்றது. வருடாந்தம் பல தொன் மணல் இங்கு கழப்படுகின்றது. முறையற்ற மற்றும் அனுமதியற்ற மணல் அகழ்வுகளினாலும் களிமண் அகழ்வுகளினாலும் ஏற்படும் பாதகமான விளைவுகள் அதேபோல் வேறு இயற்கை காரணங்களினாலும் மாஓயா தனது எழிலை இழந்துள்ளது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களை உடனடியாக புனர்நிர்மாணம் செய்துவைப்பதற்கான தேவை இதன் மூலம் வழியுறுத்தப்பட்டுள்ளது. மணல் அகழ்வு மேற்கொள்பவர்களின் உதவியுடன் 2008ஆம் ஆண்டு மாஓயா புனரமைப்புப் பணிகள் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அது பல கட்டங்களாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**கட்டம் 1** திவுலப்பிட்டிய, பாரம்பரிய மணல் அகழ்வுகளின் சங்கத்தினரின் உதவியுடன் ஆற்றங்கரைகள் மற்றும் பாதிப்படைந்த பிரதேசங்களை புனர் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிகக்ப்பட்டன. இதன் முதற்கட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.













**கட்டம் 2** மாஓயா புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் திவுலப்பிட்டிய சம்பிரதாய மணல் அகழ்வாளர்கள் மற்றும் மணல் ஏற்றிச் செல்வோரின் சங்கம் மற்றும் யலிபிபிதென மாஓயா என்ற சூழல் மன்றத்தின் ஒத்துழைப்புடன் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 2010ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

- சேதமடைந்த, பாதிக்கப்பட்ட ஆற்றங்கரைகளை மீண்டும் கட்டியெழுப்புதல்.
- அகழ்வு நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட பாரிய குழிகளை மண்ணால் நிரப்புதல்
- உரிய முறைகளை கையாண்டு ஆற்றங்கரைகளை பலப்படுத்தல்.
- வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பிரவேசித்ததன் மூலம் ஏற்பட்ட புகுவழிகளை மூடிவிடல்
- அகந்த வடிகால் முறையொன்றை ஏற்படுத்தல்
- புனரமைக்கப்பட்ட பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்குதல்.

## (ஆ) பின்வரும் பாதிக்கப்பட்ட ஆற்றங்கரைகளை புனரமைத்தல் மற்றும் அவற்றை வழமை நிலைக்கு கொண்டுவருதல்

- மகாவலி கங்கை - மகியங்கனை
- குடா ஓயா - வெல்லவாய
- ஹெத ஓயா - சியம்பலாண்டுவ
- கும்புக்கன் ஓயா - மொனறாகலை
- மாணிக்க கங்கை - புத்தள
- மதுரு ஓயா - பிபிலை
- தஹமல் ஓயா - மெதகம
- வலவே கங்கை - செவனகல

## (இ) பலபிட்டிய சூழல் மீள் உருவாக்கல் கற்கை /கலந்து கொள்ளல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டின் மத்தியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட குழிகளை மூடுதல்.





## சூழல் மீள் உருவாக்க கற்கை/கலந்து கொள்ளல் நிகழ்ச்சித்திட்டம்

## (அ) சூழல் மீள் உருவாக்க கற்கைகள்

2டீ மீள் செயற்பாடு பகுப்பாய்வினைப் பயன்படுத்தி குப்பை கூழங்களை நிரப்பும் இரண்டு இடங்கள் வழமை நிலைக்கு கொண்டு வரப்படுவதற்காக புவி பௌதீக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரிகளின் வேண்டுகோளுக்கமைய குப்பை கூழங்களை குவிக்கும் இடங்களிலிருந்து அவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் நிலையமொன்றை நிர்மாணித்தல் தொடர்பான சாத்திய அறிக்கை ஒன்று அமுல்படுத்தப்பட்டது. நீர் தேங்கி நிற்றல், நிலை நிலையாக காணப்படல் போன்ற விடயங்களின் அடிப்படையில் இந்த சாத்திய அறிக்கை தயார் செய்யப்பட்டது.





## (ஆ) தேசத்துக்கு மகுடம் மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் கீழ் 2011 நவம்பர் மாதம் 15ஆந் திகதி மொனறாகலையில் மரநடுகை செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.











கம்பஹாமாவட்டத்தில், புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக வளவில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்துக்குரிய மரச் செடிகளுக்கான நாற்று மேடையொன்று தயாரிக்கப்பட்டது. 5000 கன்றுகளை உற்பத்தி செய்யும் சாத்தியம் இந்த நாற்று மேடைக்கு உள்ளது. புனரமைப்பு பணிகளில் பயன்படுத்துவதற்காக இந்த மரக் கன்றுகள் பிரதேச அலவலகங்களுக்கு பகிர்ந்தளிக்க திட்டமிடப்பட்டுள்ளன.





## அறிவூட்டும் கருத்தரங்குகள், கண்காட்சிகள், கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

### கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

### (அ) கைத்தொழில் ரீதியாக கற்பாறைகளை தகர்ப்பதையும் சான்றிதழுக்கான பாடநெறி

2ஞ மீள் செயற்பாடு பகுப்பாய்வினைப் பயன்படுத்தி குப்பை கூழங்களை நிரப்பும் இரண்டு இடங்கள் வழமை நிலைக்கு கொண்டு வரப்படுவதற்காக புவி பௌதீக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரிகளின் வேண்டுகோளுக்கமைய குப்பை கூழங்களை குவிக்கும் இடங்களிலிருந்து அவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் நிலையமொன்றை நிர்மாணித்தல் தொடர்பான சாத்திய அறிக்கை ஒன்று அமுல்படுத்தப்பட்டது. நீர் தேங்கி நிற்றல், நிலை நிலையாக காணப்படல் போன்ற விடயங்களின் அடிப்படையில் இந்த சாத்திய அறிக்கை தயார் செய்யப்பட்டது.





### (ஆ) தேசத்துக்கு மகுடம் மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் கீழ் 2011 நவம்பர் மாதம் 15ஆந் திகதி மொனறாகலையில் மரநடுகை செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
(இ) யக்கல நாற்று மேடை
கம்பஹாமாவட்டத்தில், புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக வளவில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்துக்குரிய மரச் செடிகளுக்கான நாற்று மேடையொன்று தயாரிக்கப்பட்டது. 5000 கன்றுகளை உற்பத்தி செய்யும் சாத்தியம் இந்த நாற்று மேடைக்கு உள்ளது. புனரமைப்பு பணிகளில் பயன்படுத்துவதற்காக இந்த மரக் கன்றுகள் பிரதேச அலவலகங்களுக்கு பகிர்ந்தளிக்க திட்டமிடப்பட்டுள்ளன.
அறிவூட்டும் கருத்தரங்குகள், கண்காட்சிகள், கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்
கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்
(அ) கைத்தொழில் ரீதியாக கற்பாறைகளை தகர்ப்பதையும் சான்றிதழுக்கான பாடநெறி

## ஓநயச 2011

| செயமலர்வுகள்ஃவிழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | னுயவந | தொனிப்பொருள் |
|---|---|---|
| உமா ஓயா கருத்திட்ட செயலமர்வு - நீர்ப்பாசனத் திணைக்களம் | 2011.02.25 | உமாஓயா தொடர்பான கருத்திட்டத்தின் புவிச்சரிதவியல் சுரங்க அகழ்வு |
| மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 2011.04.23 | மூஊர் கருத்திட்டம் தொடர்பான சுற்றாடல் சமூகப் பிரச்சினைகள் |
| பன்னல பிரதேசத்தில் கௌரவ அமைச்சருடன் சேர்ந்து நடத்தப்பட்ட அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 2011.05.10 | அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பான சட்ட செயன்முறைகளும் சமூகப் பிரச்சினைகளும் |
| வரையறுக்கப்பட்ட சூழல் மன்றத்தினால் பிரதான மண்டத்திற் நடத்தப்பட் செயலமர்வு | 2011.06.10 | மாஓயா கரைகளை புனர்நிர்மாணம் செய்தல் |
| மன்னார் மாவட்ட செயலகத்தில் நடத்தப்பட் அறிவூட்டம் நிகழ்ச்சி | 2011.08.13 | மன்னார் மாவட்டத்தில் புவிச்சரிதவியல் முன்னோடி நடவடிக்கைகள் |
| செங்கல், ஓடு உற்பத்தியாளர்களுக்காக திவுலப்பிட்டியவில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.08.20 | அகழ்வு அனுமதிப் பத்திரங்களை வழங்குதலும் அதனுடன் தொடர்பான சட்டப் பிரச்சினைகளும் |
| வில்கமுவையில் நடத்தப்பட்ட செயலமர்வு | 2011.09.08 | வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் மகாவலி நதிக்கருவில் மணல் அகழ்தல் |
| மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 2011.10.01 | சுரங்க மற்றும் கனிம சட்டத்தின் ஏற்பாடுகளும் பொலிஸ் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்களும் |
| மணல் அகழும் நபர்களுக்கான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 2010.11.15 | சட்டவிரோத மணல் அகழ்வுகளை குறைத்தல் |
| தங்கொட்டுவை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற செயலமர்வு பொலிஸ் திணைக்களம் | 2011.03.22 | அகழ்வுப் பணிகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் |
| இரத்தினபுரி செயலமர்வு<br>ஹம்பாந்தோட்டை செயலமர்வு<br>மொனறாகலை செயலமர்வு<br>கொழும்பு / கம்ஹ செயலமர்வு<br>மாத்தறை செயலமர்வு<br>பதுளை செயலமர்வு<br>களுத்துறை செயலமர்வு<br>குருனாகல் செயலமர்வு<br>ஹம்பாந்தோட்டை செயலமர்வு | 2011.04.27<br>2011.05.03<br>2011.05.10<br>2011.09.06<br>2011.06.03<br>2011.09.15<br>2011.09.16<br>2011.10.03<br>2011.10.27<br>2011.11.06 | வர்த்தகமற்ற நடவடிக்கைகளுக்கான மணல், மண், பறள் கற்கள் என்பவற்றை ஏற்றம் செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு அறிவூட்டுதல். |

அகழ்வுப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்கூறிய கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்கு மேலதிகமாக புவிச்சரிதவியல் திணைக்களம் பின்வரும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

- புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்கான விஞ்ஞான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்
- இலங்கை புவிச்சரிதவியல் சங்கத்தினாலும் வேறு பலதரப்பட்ட சங்களினாலும் ஒழுங்குசெய்யப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்
- அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

## கண்காட்சிகள்

### (அ) தேசத்துக்கு மகுடம் கண்காட்சி

2011ஆம் ஆண்டு மொனறாகலை தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட





### (ஆ) தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கு அமைவாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல கண்காட்சிகளும் நடைபெற்றன.

**மேல்மட்டத்திலான புரிந்துணர்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கண்காட்சிகள் பின்வருமாறு:**

2010: சூழல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட அபிமானவயம்ப உதான கண்காட்சி

2011: (அ) கம்பஹ பண்டாரநாயக்க கல்லூரி

(ஆ) மாணிக்ககற்கள் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையினால் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட மாணிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரணக் கண்காட்சியில் அமைந்திருந்த கனிமம் மற்றும் பாறைகள் தொடர்பான கண்காட்சி

## புவிசார் ஆபத்துக்களுக்கு தீர்வு வழங்குவது தொடாபாக செயற்பாட்டு ரீதியாக கலந்து கொள்ளல் மனிதனர்களின்

மனிதர்களின் வாழ்வில் அச்சுறுத்தல் ஏற்பபடக்கூடிய விதத்திலான இயற்கை அனர்த்தங்கள் அல்லது நிலம் சார் மாற்றங்கள் ஏதேனும் தொடர்பாக எங்கிருந்தாவது அறியக் கிடைத்தால் (சுனாமி, நில அதிர்வு போன்ற அனர்த்தங்கள்) அந்த நிலைமையை ஆராய்ந்து மக்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அதற்கு ஏற்ற வகையில் ஆபத்துக்களை களைவதற்கான செயற்பாட்டுடன் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவூட்டுவதற்கும் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் நடவடிக்கை எடுக்கும். உதாரணம்: சியம்பலாண்டுவ மற்றும் கதிர்காமம் ஆகிய பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட நில வெடிப்புக்கள் தொடர்பாக புவிச்சரிதவியல் பணியகம் காவனம் செலுத்தியுள்ளது.

## நில அதிர்வுகளை அறிந்து கொள்வதில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் பொறிமுறைகளையும் கருமமாற்றும் நடவடிக்கைகளும்

பரந்தளவிலான 03 வலய ரீதியிலான நிலையங்களைக் கொண்டுள்ள புவி அதிர்வு தொடர்பான ஆய்வுகள் முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்படும். அவை மகாகந்தராவ (நிலைய குறியீடு – மல்க்) பல்லேகல – பல்க், ஹக்மன (ஹல்க்) ஆகிய இடங்களில் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக புவிச்சரிதவியல் நிலையத்தின் புவி அதிர்வு தரவுகள் நிலையம் உலகம் முழுவதிலும் உள்ள நிலையங்களுடன் தொடர்புபட்டுள்ளது. இந்த அனைத்து வலய நிலையங்களும் பிரதான அலுவலகத்தின் நில

அதிர்வு தரவுகள் மற்றும் செய்மதி தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக 24 மணித்தியாலங்கள் பூராகவும் நடைமுறையிலிருக்கும் சுனாமி எச்சரிக்கை நலையத்துடன் தொடர்புபட்டுள்ளது. இதன்படி பிரதான அலுவலகத்துக்கு உரிய நேரத்தில் கிடைக்கும் நில அதிர்வு தொடர்பான தகவல்கள் நில அதிர்வின் வீச்செல்லை என்பவற்றை இனங்காணுதல் புவிச்சரிதவியல் பத்திரங்களை தயார் செய்வதற்காக கடமையாற்றும் உத்தியோகத்தர்களினால் ஆய்வு நில அதிர்வுத் தலைவர் குறிப்பிட்ட அரச நிறுவனங்களுக்கு (அனர்த்த முகாமைத்துவ நிலையம்) மற்றும் ஊடகங்களுக்கு வழங்கப்படும்.

## வேறு

### (அ) வீடுகளை நிர்மாணித்தல்

2011 தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கு அமைவாக மொனறாகலை மாவட்டத்தில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்களின் உதவியுடன் மொனறாகலை மாவட்டத்தில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்களின் உதவியுடன் மொனறாகலை மாவட்டத்தில் வீடுகள் தேவைப்பட்டிருந்த குடும்பங்களுக்கு வாழ்வதற்காக வீடொன்று அமைத்து கொடுக்கப்பட்டது.





### (ஆ) நில அதிர்வு நலன்புரி நிலையம்

பதவியணியினருக்கு இடையில் உறவுகளை பலப்படுத்தும் வகையில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் நலன்புரி நிலையம் செயற்பட்டு வருகின்றது.



சகல நிரந்தர ஊழியர்களும் இதில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் அறவிடப்படும் அங்கத்துவப் பணத்துக்கு மேலதிகமாக நலன்புரி நிலையத்தின் நிதி ஆற்றலை மேம்படுத்தும் வகையில் புவிச்சரிதவியல் பணியகத்தினாலும் அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தம் பணம் ஒதுக்கப்படுகின்றது.

## (இ) புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் பௌத்த சங்கம்



புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தில் பணியாற்றும் பௌத்தர்கள் பலர் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். புவிச்சரிதவியல் சுரங்கம் பணியகம் மற்றும் அதன் உறுப்பினர்களின் உதவியுடன் பௌத்த கொள்கைகளை பரப்புதல், பின்பற்றுதல் மற்றும் அவற்றை புரிந்து கொள்ளுதல், ஊக்குவித்தல், போன்ற பல பௌத்த நிகழ்ச்சிகள் இங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. 2011 இல் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கிராமப்புர விஹாரையொன்றுக்கு 50 கட்டில்கள் 50 மெத்தைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. பிரவேசித்தால் வாழும் வறுமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல விசேட சமூக, சமய தொண்டுகள் பலவற்றை ஆற்றினாலும் இந்த அன்பளிப்புக்களைச் செய்யும் சந்தர்ப்பத்தில் இந்த பன்சலை மிகவும் சிதைவடைந்த நிலையிலேயே காணப்பட்டது. சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் வாழ்த்து தெரிவிப்பவர்களினால் பணியகத்தின் தலைவர், பணிப்பாளர்கள், சிரேஸ்ட முகாமையாளர்கள் மற்றும் உறுப்பினர்களினால் இந்த நட்பணி மேற்கொள்ளப்பட்டது.